# அறிவானந்த சித்தியார்.

கோ. வடிவேலுசெட்டியார்.

[விலை அணா 4]

சச்சிதானந்த அச்சியந்திரசாலை, கோமளேசுவரன் பேட்டை,
சென்னை.

ஓம்

தத்சத்

பரப்ரஹ்மணே நம:

வலங்கைமீகாமனார்

அருளிச்செய்த

# அறிவானந்த சித்தியார்.

இது

ஹிந்துவைத்தியர்

ஸ்ரீமத். அ. பெரியசாமி முதலியாரவர்கள்

விருப்பத்தின்படி

எட்டுப்பிரதிகளைக்கொண்டு

சோதித்து,

சென்னை, ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

கோ. வடிவேலுசெட்டியாரவர்களாலும்,

மங்கலம். சண்முகமுதலியாரவர்களாலும்,

சென்னை, கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

Copy-right Registered.

[விலை **1909.** அணா 4]

செய்யுள்

# அட்டவணை.


| | | |
|---|---|---|
| **அ.** | | பக்கம். |
| அஞ்செழுத் | ... | 49 |
| அடங்கக் | ... | 46 |
| அடர்ந்தெழு | ... | 10 |
| அடிமுடி | ... | 63 |
| அடியற்று | ... | 57 |
| அணியார்சித் | ... | 38 |
| அத்திநற் | ... | 25 |
| அத்தேசந் | ... | 56 |
| அந்தரி | ... | 50 |
| அப்பின | ... | 22 |
| அப்புக் | ... | 23 |
| அறியாத | ... | 52 |
| அரியதிம் | ... | 4 |
| அரியநறு | ... | 9 |
| அளவிற் | ... | 48 |
| அறமிக்க | ... | 10 |
| அறியாப் | ... | 16 |
| அறியு | ... | 41 |
| அறிவு | ... | 42 |
| அறியுஞ்சிற் | ... | 20 |
| அளவற் | ... | 33 |
| அளியலர் | ... | 9 |
| அனுபூதி | ... | 41 |
| அன்றே | ... | 67 |
| அன்ன | ... | 17 |
| அன்னிய | ... | 29 |
| அன்னியமின்றி | ... | 57 |
| **ஆ.** | | பக்கம். |
| ஆரும் | ... | 33 |
| ஆக்க | ... | 63 |
| ஆத்துமவாக்கியங் | ... | 52 |
| ஆத்துமதத்துவ | ... | 30 |
| ஆன்மா | ... | 33 |
| ஆத்மா | ... | 44 |
| ஆய்ந்த | ... | 53 |
| ஆய்ந்தவே | ... | 56 |
| ஆர்க்கு | ... | 3 |
| ஆருறு | ... | 46 |
| ஆறுமதி | ... | 1 |
| ஆற்றிடுஞ் | ... | 52 |
| **இ.** | | |
| இணங்கு | ... | 18 |
| இந்த | ... | 45 |
| இப்போ | ... | 11 |
| இரண்டலை | ... | 65 |
| இருந்த | ... | 47 |
| இறக்குமிப் | ... | 48 |
| இறையுயி | ... | 48 |
| இனியோ | ... | 5 |
| **ஈ.** | | |
| ஈரா | ... | 26 |
| ஈருய் | ... | 1 |
| **உ.** | | |
| உடல்தேர்ந் | ... | 9 |
| உணரு | ... | 42 |
| உணர்வா | ... | 39 |
| உணர்வெனி | ... | 38 |
| உண்ணிலை | ... | 25 |

| | பக்கம். |
|---|---|
| உதிக்கு ... | 27 |
| உதிநாற் ... | 29 |
| உலகா ... | 51 |
| உறக்கம் ... | 28 |
| உறைகின் ... | 65 |
| உறைந்த ... | 64 |
| உறைந்தய ... | 8 |
| உற்றசர் ... | 54 |
| உற்றவிப் ... | 10 |
| உற்றவுணர் ... | 44 |
| உற்றவுடலது ... | 17 |
| உற்றசுழு ... | 25 |
| உற்றபுரு ... | 40 |
| உற்றிடு ... | 9 |
| உற்றிடுமா ... | 67 |
| உற்றே ... | 66 |
| உன்னி ... | 55 |
| உன்னை ... | 53 |
| உன்னுநற் ... | 44 |
| உன்னும் ... | 9 |
| **ஊ.** | |
| ஊச ... | 18 |
| ஊட்டி ... | 50 |
| ஊன ... | 6 |
| ஊனறி ... | 38 |
| ஊறுகி ... | 66 |
| ஊனில்லை ... | 66 |
| ஊனுண்டிங் ... | 67 |
| **எ.** | |
| எட்டித ... | 27 |
| எண்ணிய ... | 42 |
| எண்ணுற்ற ... | 22 |
| எந்த ... | 39 |
| எய்திடுங் ... | 36 |
| எய்திடும் ... | 15 |
| எய்து ... | 1 |

| | பக்கம். |
|---|---|
| எழில்பெறுஞ் ... | 12 |
| என்று ... | 7 |
| என்றுங் ... | 16 |
| **ஏ.** | |
| ஏறியகால ... | 36 |
| ஏற்ற ... | 56 |
| ஏற்றமிறந்த ... | 62 |
| **ஒ.** | |
| ஒண்பெற்ற ... | 13 |
| ஒடுங்கிய ... | 35 |
| ஒத்துமுன் ... | 47 |
| ஒல்லைப்படாத ... | 13 |
| ஒழிவற ... | 64 |
| ஒன்றாகி ... | 33 |
| ஒன்றிய ... | 64 |
| **ஓ.** | |
| ஓங்குத ... | 25 |
| ஓங்கும்விஞ் ... | 32 |
| **க.** | |
| கண்டவிம் ... | 60 |
| கந்தங் ... | 35 |
| கருவி ... | 41 |
| கருவுறும் ... | 14 |
| கனவினனைவது ... | 30 |
| கனவினனைவில் ... | 60 |
| கனவின் ... | 2 |
| **கா.** | |
| காட்டிய ... | 63 |
| காணுந்து ... | 68 |
| காதுகண் ... | 27 |
| காமக் ... | 28 |
| காரண ... | 64 |
| காரிய ... | 65 |
| காரியநீங்குங் ... | 62 |

| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| காணலே | ... | 3 | சாருநற் | ... | 22 |
| **கு.** | | | சாற்றிய | ... | 61 |
| குணம்புலன் | ... | 31 | சாற்று | ... | 6 |
| குலங்குணங் | ... | 50 | சாற்றுமுறைக்க | ... | 19 |
| குறிகுணங் | ... | 49 | சார்வுறு | ... | 36 |
| குறியா | ... | 68 | **சி.** | | |
| குறைவற்ற | ... | 30 | சிவத்திற் | ... | 20 |
| குற்ற | ... | 60 | சிவனிச்சை | ... | 33 |
| **கூ.** | | | **சு.** | | |
| கூரும் | ... | 26 | சுகஞான | ... | 37 |
| கூர்ந்த | ... | 2 | சுக்கிலம் | ... | 15 |
| **கெ.** | | | சுருதி | ... | 8 |
| கெட்டிங் | ... | 63 | சுழுத்தி | ... | 30 |
| **கே.** | | | **செ.** | | |
| கேட்டிடு | ... | 16 | செப்பிய | ... | 54 |
| **கொ.** | | | செறியு | ... | 2 |
| கொலேபொய் | ... | 28 | செரியும்வினைக | ... | 12 |
| கொல்லாத | ... | 4 | செல்லும் | ... | 35 |
| **கோ.** | | | செறிந்திடுங் | ... | 57 |
| கோதைதன் | ... | 14 | செறிந்துசிவமாய் | ... | 45 |
| கோறல் | ... | 4 | செறியுமிவ் | ... | 62 |
| **ச.** | | | செறியும் | ... | 51 |
| சடமே | ... | 49 | சேறியும்பாரீ | ... | 64 |
| சத்தவித் | ... | 13 | செற்றுமைம் | ... | 23 |
| சத்த | ... | 58 | | | |
| சத்திது | ... | 39 | **சே.** | | |
| சந்திரன் | ... | 27 | சேர்ந்தசிகை | ... | 5 |
| சலத்தினிற் | ... | 21 | சேர்ந்த | ... | 28 |
| சலத்துக்குச் | ... | 23 | சேர்ந்தகருவி | ... | 53 |
| சற்று | ... | 66 | சேர்ந்தபிராணன் | ... | 59 |
| சன்மார்க்க | ... | 32 | சேர்ந்தெனே | ... | 57 |
| **சா.** | | | சேருஞ்சுகம் | ... | 19 |
| சாக்கிரங் | ... | 62 | **சொ.** | | |
| சாத்து | ... | 35 | சொரியு | ... | 13 |
| சாரு | ... | 42 | சொல்லயு | ... | 35 |

| | பக்கம். |
|---|---|
| சொண்ணை ... | 17 |
| சொன்னசிற் ... | 44 |
| சொன்னநற் ... | 19 |
| **சோ.** | |
| சோத்திரத் ... | 24 |
| **த.** | |
| தத்துவங் ... | 43 |
| தத்துவ ... | 46 |
| தந்தைதன் ... | 15 |
| தரித்த ... | 17 |
| தலைசிகை ... | 5 |
| தனக்கு ... | 18 |
| தனக்குத்தன் ... | 7 |
| தனுகர ... | 29 |
| **தா.** | |
| தாயு ... | 14 |
| **தி.** | |
| தியானித் ... | 47 |
| திருக்கோ ... | 31 |
| திருந்திய ... | 56 |
| திருந்துஞ் ... | 58 |
| திருவேடத் ... | 51 |
| **தீ.** | |
| தீதற்ற ... | 8 |
| தீதிற் ... | 49 |
| தீதுள ... | 6 |
| தீயகொலை ... | 5 |
| தீயின் ... | 22 |
| தீர்த்தரு ... | 65 |
| **து.** | |
| துரிய ... | 31 |
| துலங்கவே ... | 31 |
| துலங்கி ... | 61 |
| துன்னுமெய் ... | 7 |
| **தூ.** | பக்கம். |
| தூயழற் ... | 20 |
| **தெ.** | |
| தென்றற் ... | 22 |
| **தே.** | |
| தேரிற் ... | 4 |
| **தை.** | |
| தைசதங் ... | 34 |
| **தோ.** | |
| தோற்றிய ... | 16 |
| தோற்றுமிச் ... | 37 |
| **ப.** | |
| பஞ்சிழை ... | 61 |
| பதிபல் ... | 32 |
| பதிபசு ... | 32 |
| பதித்மூத் ... | 31 |
| பரிந்த ... | 2 |
| பரிந்தொரு ... | 7 |
| பரிவுடன் ... | 3 |
| பலகிரிறஞ் ... | 43 |
| பற்றிமுன் ... | 34 |
| புன்னிய ... | 54 |
| பன்னியகாரிய ... | 54 |
| பன்னியதத்து ... | 61 |
| பன்னுமிப் ... | 47 |
| **பி.** | |
| பித்தனை ... | 3 |
| பிருதிவி ... | 37 |
| பிறந்திடுங் ... | 55 |
| பிறிதொன்று ... | 63 |
| பிறிவறி ... | 54 |
| பிறிவற் ... | 26 |
| பிறிவற்ற ... | 6 |
| **பு.** | |
| புக்க ... | 13 |
| புத்திக் ... | 28 |

| | | பக்கம். |
|---|---|---|
| புரிந்த | ... | 55 |
| **பூ.** | | |
| பூதமிங் | ... | 35 |
| **பெ.** | | |
| பெத்தரைப் | ... | 45 |
| பெந்த | ... | 48 |
| பெரிய | ... | 61 |
| பெருவான் | ... | 21 |
| பெற்றதைத் | ... | 36 |
| பெற்றநற் | ... | 51 |
| **பே.** | | |
| பேதர | ... | 37 |
| **பொ.** | | |
| பொங்கு | ... | 19 |
| பொருந்துமென் | ... | 15 |
| பொருந்திய | ... | 11 |
| பொருந்து | ... | 59 |
| பொறிபுல | ... | 59 |
| பொறிபுலன் | ... | 56 |
| பொறியைப் | ... | 42 |
| பொறியுற்று | ... | 18 |
| **போ.** | | |
| போக்கும் | ... | 66 |
| போற்றுநல் | ... | 34 |
| **ம.** | | |
| மண்டல | ... | 59 |
| மண்ணினிற் | ... | 21 |
| மன்னிய | ... | 59 |
| மண்முத | ... | 50 |
| மதித்து | ... | 6 |
| மயக்க | ... | 52 |
| மருவுமிங் | ... | 14 |
| மலமேவு | ... | 43 |
| மன்னு | ... | 14 |
| மன்னுயி | ... | 40 |

| | | பக்கம், |
|---|---|---|
| மன்னுநற் | ... | 54 |
| மன்னுமிங் | ... | 65 |
| மன்னுமுடல் | ... | 64 |
| மன்னும்பவத்தில் | ... | 16 |
| **மா.** | | |
| மாசறு | ... | 41 |
| மார்பிரு | ... | 15 |
| **மி.** | | |
| மிகநீறிட் | ... | 31 |
| மிக்கறி | ... | 40 |
| மிக்கநல் | ... | 37 |
| **மு.** | | |
| முற்றுமுன் | ... | 45 |
| முன்செய் | ... | 46 |
| முன்னை | ... | 41 |
| **மூ.** | | |
| மூன்று | ... | 36 |
| **மெ.** | | |
| மெய்யதிங் | ... | 10 |
| **மொ.** | | |
| மொன்றுதல் | | 11 |
| **ந.** | | |
| நகாரக் | ... | 51 |
| நலமுடை | ... | 6 |
| நறுமல | ... | 12 |
| நற்கலை | ... | 2 |
| நற்றவ | ... | 8 |
| நற்றவமேவிப் | ... | 11 |
| நனவி | ... | 29 |
| நனவினிற் | ... | 41 |
| **நா** | | |
| நாகனும் | ... | 62 |
| நாடி | ... | 25 |
| நாடிகள் | ... | 25 |
| நாடிலிம் | ... | 55 |

| நி. | | பக்கம். |
|---|---|---|
| நிற்சது | ... | 27 |
| நித்தனை | ... | 67 |
| நித்தியா | ... | 12 |
| நிரவய | ... | 1 |
| நிலவி | ... | 26 |
| நிறைந்த | ... | 55 |
| நிறைந்திங் | ... | 60 |
| நிறைந்தே | ... | 52 |
| நின்றநற் | ... | 3 |
| நினைக்குமன | ... | 58 |
| **நீ.** | | |
| நீங்கிய | ... | 20 |
| நீடு | ... | 34 |
| நீயது | ... | 64 |
| **நெ.** | | |
| நெறியிங் | ... | 53 |
| நெறியுறப் | ... | 11 |
| நெறியுற் | ... | 18 |
| **நே.** | | |
| நேர்ந்த | ... | 53 |
| **வ** | | |
| வருத்தநல் | ... | 53 |
| வளர்க்கு | ... | 19 |
| வளந்தரு | ... | 40 |

| வா. | | பக்கம். |
|---|---|---|
| வாச்சாதி | ... | 40 |
| வாக்கி | ... | 24 |
| வாயது | ... | 24 |
| வாயு | ... | 23 |
| வாயுவின் | ... | 20 |
| வாய்ந்த | ... | 10 |
| வாய்ந்தமன | ... | 24 |
| வாய்ந்தகன் | ... | 38 |
| வார்த்தையை | ... | 85 |
| வாணிடஞ் | ... | 24 |
| வான்கூறு | ... | 21 |
| **வி.** | | |
| விகாரஞ் | ... | 23 |
| விரிந்த | ... | 60 |
| விரிந்தநல் | ... | 7 |
| விரிந்திடு | ... | 21 |
| விருப்பு | ... | 20 |
| விளங்குமண் | ... | 22 |
| விளம்பிய | ... | 27 |
| விழிக்கொளி | ... | 39 |
| விழுந்து | ... | 67 |
| **வே.** | | |
| வேதியர் | ... | |

சிவமயம்.

# அறிவானந்தசித்தியார்.

## பாயிரம்.

### சோரூபவணக்கம்.

நிரவயனின்மலனிர்க்குணனித்த னிரஞ்சனன்மெய்
பரவியநிர்த்தொந்தன் பற்றிவிசுத்தன்பரமனந்தன்
விரவியபூரணனேகன்பே ரின்பன்வியாபகனென்
கரவுளங்கோயில்கொண் டானெழில்போற்றுவன்காத
[வித்தே. (1)

ஈருய்முதலொன்றிருவடிவாகியிம் மூவுருவாய்
மாருதநால்வகைத் தோற்றமைம்பூதங்கண் மற்றுஞ்சு
யாருகியேழிசையாகித்திசையெட்டுமாகியன்றி [வை
வேருகிநின்றவகோசரம்போற்றுவன்மேவிநின்றே. ()

### அருளிறைவணக்கம்.

எய்துமெழுவகைத்தோற்றத்தில்யான்பிறந்தெய்த்துழ
வெய்யதுயரம்விடுக்கவென்போ லுருமேவியிங்ஙன்[ லும்
றுய்யசர்வாங்கரன்பூரணன்வந்தென் றுகடவிர்த்த
செய்யதிருவடியென்சென்னிமேற்கொண்டுசிந்திப்பனே. (3)

ஆறுமதியமுஞ்சூடுமரனுமரியயனு
மாறுஞ்சமயமுமண்முதற்பூதமும்வானவரும்
வேறும்பலபலரூபமுமாகிவியன்பொருளாய்க்
கூறுமறையின்முடிவாகுமென்றன்குருபரனே. (4)

### அவையடக்கம்.

நற்கலைமாமதிக்கொத்திடமின்மினிநாடியது
மற்புதமாரிக்கெதிர்பனிபெய்திடுமாங்கதுபோற்
றற்பொருளீதென்றநூற்கெதிர்யானித் தமிழுரைத்தல்
சொற்குறைநீக்குவர்சான்றோரென்போல்வரென்சொல்லுவரே.

பரிந்தநல்வேதமுமாகமந்தானுமப்பல்சமயந்
தெரிந்தபயன்களுந்தேவருமூவருந்தேர்ந்தறியா
திருந்தபரம்பொருள்யானுரைப்பேனென்பதேதையொக்கும்
பொருந்தும்பனிபெய்துகாந்தமதாவது போலுமன்றே. (6)

### நூற்பெயர்.

செறியுமுததியிற்சேருமமுதநற்றேவர்கொண்டு
மறியும்பதமலதில்லைகண்டோர்மன்னுமெவ்வுயிர்க்கு
மறிவெனும்வேலையமுதுணவேயழியாதசுகம்
பெறநல்குநூற்கறிவானந்தசித்தியெனப் பெயரே. (7)

## நூல்.

### ஐயந்தேளிவித்தல்.

கூர்ந்தவிருளிற் பழுதையைப் பாம்பெனக்கொண் டவர்தா, மார்ந்த விளக்குற் றறிய மயக்கறு மாங்கது போற், சார்ந்த வுடம்பு சகப்பொரு ளென்னுமிச் சார்வை யெல்லாந், தேர்ந்த வருத்தங்க ணிங்கின தேதென்று செப்புவதே. (1)

கனவின்மலடி குழவியைப்பெற்றுக் களித்தவடா, னனவிற் கருதப்பொய் யானதுபோல நளினமுற்ற, தன மிக்க மக்களும் பெண்டிருஞ் சுற்றமுந் தன்னுடலு, மெனவுற்ற தென்னை யறியப்பொய்யாகி யிருந்ததுவே.

பரிவுடன் வெள்ளியென் றென்றிக் கிளிஞ்சிலைப் பற்றிநின்று, தெரிவுறப்பார்த்துத் தெளிந்துபொய்யென்ற திறமதுபோன், மருவு முடல்சகம் வாழ்வு பெண் பிள்ளை மனைவகுத்த, வுருவ மடையப்பொய் யென்றே யுரைப்ப ருணர்ந்தவரே. (3)

கானலை நீரென்று கண்டு பருகிடக் காதலித்தே, போனவர் தாமய லென்றது கொண்டு பொருந்துவ போ, லான செகத்தி லடைந்த பொருளிவை யான வெல்லா, மூனமதென்றிங் குணர்ந்தோர்க்கு நீங்கு மொழிவறவே. (4)

## தெளிந்துரைத்தல்.

நின்றநற் கட்டையைக் கள்ளனென் றெண்ணி நெறிகலங்கிச், சென்றபின் பொய்யென்று செப்புவ போலச் செறிந்துலக, மென்றுமெய் யென்றிங் கிருந்ததைத் தீர விசைந்தறிய, வன்றுபொய் யென்ன வறிந்தே னுலக மடையவின்றே. (5)

பித்தனைச் சேதிக்க வென்று மொழியவிப் பேருலக, மித்தனை யும்மிறு மென்றனக்கில்லை யெனுமது போ, லத்தன் சொல்லொன்றி லெனைமாயச் சேதித்த வன்றெனக்குச், சித்த மயனுல கெல்லா மிறந்ததென் செப்புவதே. (6)

## இதோபதேசம்.

ஆர்க்கு மிதங்களைச் செய்தா லறமென் றருமறைநா, லோர்க்க வுரைத்த விதவுபதேச மியம்பு கின்றேன், மார்க்க மொருவர்க்குச் செய்தார்க்கு மார்க்கம் வருங்

கொலைதான், கோர்க்கு மெவர்க்குங் கொலைசூழுமென் னினுங் கொல்லுவரோ. (7)

கோல்லாத தன்மத்துக் கொப்பான தன்மமுங் கூறரிது, கொல்லாத செல்வத்துக் கொப்பான செல் வங் குறிக்கரிது, கொல்லாத் துறவினுக் கொப்பாந் துறவிங்ஙன் கூடரிது, கொல்லாத ஞானத்துக் கொப் பான ஞானங் கொளவரிதே. (8)

கோறல் களவுகட் காமம்பொய் விட்டின்று கூறு மெய்யா, லாற வெவர்க்கு மளித்திட்டிங் குண்டிருந் தாசையது, பாற விங்கைந்து மடக்கி யறிஞர்தம் பாத முற்றோர்க், கேறவிதுவன்றி முத்தியிலையென் றிசைத் திடுமே. (9)

## அருமையுரைத்தல்.

தேரிற் சதுர யுகமிரண் டாயிர நாட்டிங்களாண், டேரிலைந் நூற்றி லயன்மாண் டுகாந்தமு முற்றுத் தென்பாற், சேருநகத்துளை யில்வட பாற்கழி செல் லெளிது, சாரும் பிறப்பொழித் திம்மா னிடத்திற் சனிக்கரிதே. (10)

அரியதிம் மானிட மாகி யருஞ்சுனை நீரருந்தித், திரியுமன் னுட்டிடை தப்பி நன்னுட்டிடை சேர்வரி திங், குரியப் பிரபஞ்ச நூலினைப் பொய்யென் றிங் குண் மை நன்னு, றெரித லரிது பயன்கேட் டதனிலை சேர் வரிதே. (11)

## வன்னச்சிரமம்.

வேதியர் மாமறை யோதி நிலைநிற்கை மிக்கமன் னர்,நீதி யுடனுல காள்கை வணிகர் நிறுத்துரைத்துக்,

கோதறக் கொண்டுயி ரோம்பல்வே ளாளர் கொழுமி குதி; தீதற விட்டுண்டல் வன்னங்க ளுன்கின் றிற மிதுவே. (12)

### பிரமசரியம்.

தலைசிகை யூண்பிச்சை சார்கலை யோத றரைச யனம், நிலைபெற வேபுலன் வென்றுமுப் போதுமன் னிட்டையிலே,மலைவறவேபிர்மசாரிக் கிரவுணன் மாற் றி யெண்ணெய், யலைவறத் தள்ளிநில் லாதொன்று தப் பிலருநரகே. (13)

### கிருகஸ்தம்.

தீயகொலை பொய்கட் காமமற் றில்லறஞ் சேர்ந்த வர்தாம், தூய துறவ ருடன்மூவர் தேவர்க டொல் பிதிரர், தாயர்நற் பாலர் மனைவிய ரந்தகர் தந்தைதம, ராயும் விருத்த ரகுதியைக் காக்கிலர்க் காழ்நரகே. (14)

### வானப்பிரஸ்தம்.

இனியோ தனம்விட்டுச் சாகாதி யுண்டிங் கிருந் துநிட்டை, பனிவெயி றம்மிற் பொருந்திப்பஞ் சாக்கி னிப் பற்றுடைத்தாய்க், கனிமிகு கானத் துறைந்தைம் புலனைக்கடிந்துநின்று, தனியுறை வானப் பிரத்தோர் நிலைவிடிற் றூழ்நரகே. (15)

### சந்நியாசம்.

சேர்ந்த சிகைநூ லொழித்தின்று செந்துகிற் றெண்டெடுத்துப், போந்த கலைகளை யோதிமுப் போ தும் புனன்முழுகி, யார்ந்தநன் னிட்டைகள் செய்து பிர்ம் மார்ப்பண மாக்கிப்பிச்சை, சார்ந்தசந் யாசத் திவையொன் றொழியிற் றருநரகே. (16)

அதிவன்னுச்சிரமம்.

சாற்று மிப்பூதப் பவுதிக மாய்ப்பொலி சார்வை யெல்லாந், தோற்ற மறவனு பூதியி லான சுகசொருப, மாற்றெங்கு நின்ற பொருளென் றறிந்தது வாகி யுற் றோ, ரேற்ற மிவரதி வர்ணுச்சிரம ரெனுமறையே. (17)

பிறிவற்ற முத்தி நமையன்றி வேறொரு பேறிலை யென், றறிவுற் றவரதி வர்ணுச் சிரம ரவரெவர்க்கும், நெறியுற்ற நிட்டை நியமமதனை நினைவ ரென்று, செறி வுற்ற நாற்பெரு மாமறை யானது செப்பிடுமே. (18)

ஞானிமகாத்மியம்

ஊன மெனும்பிர பஞ்ச மொழித்திங் குணருரு வாய்த், தானும் பரனு மிரண்டற வேசச்சி தானந்தத் தை, மோனந் தனிலிங் குணர்ந்தோர் பெருமை முழு துமறை,யான துரைக்க வறியாது காணு மவர்களையே.

தீதுள தான மெனினுமெய்ஞ் ஞானி செறிந்த விடங், கோதறு கோடி விரற்கிடை தூரமுங் கூறரிய, தாதலி னற்சிவ பூமிநற் றீர்த்த மதிசுத்தமாம், பாதம் பொருந்து மிடம்பிர காசம் பயின்றிடுமே. (20)

நலமுடை ஞானியிங் கார்மனை யாயினு நண்ணி லவர், குலபிதி ரானவர் கூத்தா டுவருற்றுக் கோதறு நற், றலமதில் வைத்துப சாரங்கள் செய்திடிற் சாரு நர, கிலைநமக் கென்று பரகதி சேர்வ ரெனுமறையே.

ஞானிசீலம்.

மதித்துமிரார்மனை வாழ்வுகடம்மையு மன்னரை யுந், துதித்து மிரார்பொன்க லொத்திடுங் காட்சியர் துக்கஞ்செய்தார்க், கெதிர்த்துமிரார்நன்மைசெய்தார்க

ளென்று மினிமையுறுர், விதித்த படியுடற் கென்று
றுஞ் சீலத்தை மேவுவரே. (22)

என்று மிளமை கழியா தெனினுமிப் போதுட
லம், பொன்றினுஞ் செல்வம் பொருந்தினும் போகி
னும் பூதலத்தோர், நன்றிவர் தீதிவரென்கினுங் கிஞ்சித்
து நாட்டங்கெடா, ரொன்று மிலாதமெய்ஞ் ஞானி
கள்சீலத் தொழுக்கமிதே. (23)

கூடாவோழுக்கம்.

விரிந்தநல் வேத புராணங்க ளாகம மிக்ககலை,
தெரிந்து படித்துப் பொருள்செப்பித் தாநிலைசேர்ந்து
நில்லா, திருந்தசண் டாளரி லேற்றங் கழுதை யெனிற்
குங்குமம், பரிந்து சுமந்தும்பின் வஞ்சம்பண்ணுத பய
னெழிலே. (24)

தனக்குத்தன் னெஞ்சது சான்று யிருக்கவுந் தா
னிங்குண்மை,யனைத்துமுற் றேமென் றதிபஞ்ச பாதக
ராய்ந்தவுரை, யெனத்துற்றுக் கேட்டுப் பரிசித் திருந்த
விருவருந்தாம், மனத்துக்க முற்றிங் கெரிவாய் நிரயத்
து மன்னுவரே. (25)

ஞானியேவற் சிறப்பு.

பரிந்தொரு கோடி மறையோர்க்குப் பூமிபொன்
பண்புடனே், வருந்தி மிடிகெட வைப்பது தன்னின்
மறைமுடிவு, தெரிந்த மெய்ஞ்ஞானிக் கொருபிடி
பிச்சை சிறப்புடனே, பொருந்த வளிப்பதற் கொவ்வா
தெனமறை போற்றிடுமே. (26)

துன்னுமெய்ஞ் ஞானி தனக்கேவல் செய்தவர் து
ஞ்சிடில்வான், மன்னுவிமானஞ் சிவலோகமேறிமகிழ்ந்

தங்கது, தன்னி லொருகற்ப கோடிப்பின் வைகுந்தந் தன்னில்வந்தே, யுன்னு மொருகற்ப கால முறைந்தய னூர்புகுமே. (27)

உறைந்தய னூரி னெடுங்காலம் வாழ்ந்திந் திரனுல கிற், செறிந்ததி கால மியக்கர்கந் தர்வர்தந் தேச முற்றே, யறந்தரு மானிட மாகிக்குருபாற் கன்புடனே, சிறந்துமுன் னேவற் குறைமுடித் தேமுத்தி சேர்வர் களே. (28)

ஞானியை யிகழ்ந்தோர்கேடு.

தீதற்ற நன்மை யுணர்ந்தமெய்ஞ் ஞானிக்குத் தீமைசெய்தாற், கோதற்ற வேதிய ரிற்கோடிபேரினை க்கொன்றதொக்கு, மீதிவன் சொன்னது கேட்டுத் துணிந்த விவர்களதி, பாதகர் கோவொரு கோடிகொல் பாவம் பயில்வர்களே. (29)

சுருதி முடிவை யுணர்ந்தமெய்ஞ் ஞானிக்குத் துக்கநெஞ்சிற், கருதின போதிற் களவுறு கோடிசெய் கன்மமுறு, முரிய வவருடன் கூடி னவர்மது வுற்றருந் தித், திரியுமிப்பாதக ரிற்கோடி பாவஞ் செறிவர்களே.

† கன்மவிதி.

நற்றவ மேவிய ஞானி யுடலமெய்ஞ் ஞானவங்கி, செற்றுமுன் வெந்ததை யங்கி யனற்சுடிற் றேசங்கெடு, முற்றறிந் தாடி யருளிவித் தர்ச்சித் துடந்துசுண்ணம், பற்றி யிடித்தடி பாடிநின் றூர்க்குப் பரகதியே. (31)

† கனனவிதியென்றும் பாடமுண்டு.

அரிய நறுமலர் கொண்டிங்஦ன் கோயி லலங்கரித்துப், பரிவி லெழுந்தரு ளப்பண்ணு மன்பர்தம் பத்தியுட, னுரிய முறைமையி னூற்குழி கல்லியங் குட்களித்துத், தெரிதரு பீடநற் கோயில்செய் தேத்தச் சிறந்திடுமே. (32)

மோட்சவேது.

உற்றிடு முத்தி கருத்தறி லென்ப ருடலிருக்கச், செற்றுங் கருத்திங் கருத கருத்ததிற் சேருமிரு, டெற்ற வினையற வேமுத்தி யென்னிற் றெழிலில்வினை, முற்றுங் தொழிலொழிப் பேனெனி லுண்மல முத்தியன்றே. (33)

உடல்தேர்ந் திடப்பித்தன் றானே மருந்திங் குணர்ந்துதின்பான், விடந்தீண்டி மூர்ச்சித் தவனே கருடனை மெய்யுணர்வான், சடந்தோயு மாயையைத் தானே வொழித்தொளி தன்னினிற்பான், றிடந்தேர் குரவனல் லாதொன்றி னானுந் தெளிவரிதே. (34)

அளியலர் விட்டுவிட் டாய்ந்து மதுவுண் டகநிரப்பிக், களிவந் திருந்த கருத்திங் குறவன் கவலையெனும், விளிவற விட்டுவிட் டாய்ந்து வியன்குரு மேவிமிகத், தெளிவந் துணைக்கண் டிடுமள வுங்குருத் தேடிடுமே. (35)

அறுதியுரைத்தல்.

உன்னும் புவியிவ ருள வரிய னெனவுறினு, மன்னு முடிதலை வைக்கு மளவு மலைவதுபோன், முன்னஞ் சுகசொரு பானந்தஞ் சேர முதலெனினுந், துன்னுங் குரவ னடிசூடி னல்லது தோய்வரிதே. (36)

### ஆசிரியரிலக்கணம்.

அடர்ந்தெழு கானகச் செத்தையை யங்கி யரிப்பதுபோற், சடங்கொண்டு சூழ வரும்பாசக் கூளச் சழக்கையெல்லாந், திடங்கொண்டு ஞானக் கினியாலெரித்தின்று சீவன்முத்தி, யிடங்கொண்டு வாழ வருள்பவ னேயிங் கெழிற்குருவே. (37)

மேய்யதிங் கென்ன வுணர்ந்துற் றிருக்கும் வியனுலகைப், பொய்யதிங் கென்ன வுணர்த்தி யுணர்ந்த பொருவிற்கரி, யைய மறப்பரந் தன்னேடிங் கொன்ற வனுபவத்திற், கையின் மணியெனக் காட்டிடு கின்றவன் காண்குருவே. (38)

### அனுசிரியரிலக்கணம்.

உற்றவிப் பாச மொழிந்துணர் வாய்நின்ற வுத்தமர்போற், கற்றறி வாக வுரைப்பார் திரவியங் கையுறவே, செற்ற மயலற நில்லார் பிறர்குற்றந் தீர்ப்பதென்னே, பற்றிய சேற்றினைச் சேற்ருற் கழுவும் பரிசொத்ததே. (39)

வாய்ந்த மணலிற் றயிலமு மாமை மயிர்ப்படமு, மேய்ந்த கனவிற் குழவி முயற்கொம்பு மில்லதுண்டோ, தோய்ந்தின்று தம்மை யறியார் குருத்துவஞ் சொல்லுவதிங், காய்ந்த விடத்தி லவைவயு முண்டாகி லறிவிப்பரே. (40)

### அபக்குவரிலக்கணம்.

அறமிக்க நல்லின்ப முத்தியை யன்பர்க் களிப்பதல்லான், மறமிக்க பக்குவர்க் கீயார்கண் ஞான மகிழ்ந்தளித்தல், பிறவிக் குருடர்க்கு மோகாட்டன் மாணிக்

கம் பேயர்கையி, லுறவைத்து நோக்க லபக்குவர் ஞான முறுவர்களே. (41)

நேறியுறப் பூமிபொன் வேண்டி னதுதர நீயுரையென், றறிவிலர் கேட்க வறிவுரைத் தாலறத் தச்சங்கெட்டே, செறிவுறுவார்நர கென்றேயருளிலர்ச்சேர்ந்தவர்க்குங், குறியுரைத் தார்களுங் கூடக் கெடமறைகூப்பிடுமே. (42)

சீடாசாரம்.

மோன்றுதல்கோபங் கொடுமையிடும்பை மொழி மறுத்தல், கன்றுதல் பொய்யுட் கரவபி மானங் கலுழ்ச்சியுள, நின்றெதிர் கூறல் பொருளறி வுஞ்சொல்ல னிந்தித்தரு, னின்றிறை வன்னடி சேரு மடியார்க்கியற்கையன்றே. (43)

பொருந்திய வாகனஞ் சந்தனம் பூமுடி பூடணமோ, டருந்துதல் பாக்குக் குளியா சனமெண்ணெய்யாயுதந்தான், பரிந்த சயனங் கவிகை மிதியடி பல்லுரிஞ்சல், திருந்துங் குருமுன் னடியா ரொழியுந் திறமிதுவே. (44)

இப்போ துலகிற்பொய் வாழ்வுற்ற வேந்தர்க்கிதம்வழிபா, டொப்போடு செய்துற்ற வுண்மையைப்போலொழி யாதசெல்வ, மெப்போதும் பெற்றிடநல்குங் குரவ னெழிலடியைத், தப்பாது சீடன்வழிபாடுறின்முத்தி சத்தியமே. (45)

பக்தவரிலக்கணம்.

நற்றவ மேவிப் பொருந்துமெய்ஞ் ஞானமு மடையிட, வுற்றவரிந்தச் சகத்தினில் வாழ்வினை யுட்கருத்

தாற், பற்றி யிடாதது போலப்பற் றற்றுப் பரமகுரு, மற்றுமோர்தெய்வமுண் டென்னார்கள்பக்குவம் வாய்ந் தவரே. (46)

சேறியும் வினைக ளிரண்டுஞ் சமனுறிற்றேகம்பொ ய்யென், றறியும்பின் வன்னமும் வாழ்வு முதறி யலறித் தன்னை, நெறியுறக் காட்டுங் குரவனைத் தேடி நினைந்து நைந்து, குறிகுரு மானிலை கண்டுகைக் கொள்ளுங் குரு பரனே. (47)

## சாதன சதுட்டயம்.

நித்தியாநித்திய வத்துவிவேக நிலையறிந்து, வித் தா மிகமுத்தி ரார்த்தபோ கத்தில் விராகமுற, வொத் தாஞ் சமதம மாதிசம் பத்தியிங் குற்றடக்கிச், சத்தா முமுட்சுத் துவமெய்தல் பக்குவர் சாதனமே. (48)

## உடற்பற்று.

எழில்பெறுஞ் சத்த பரிச முருவ மிரதகந்தம், பொழியு மனோபுத்தி யாங்காரத் தோடு புரியட்டக, மொழிவிலிச் சூக்கும தேகங்கொண் டெங்கு முயிர்வி னைக்கீ, டிழிவுறுந் தூல வுடற்றந்தை தாயிடத் தெய் திடுமே. (49)

## தூலவுடலுற்பத்திகூறல்.

நறுமல ரின்மணங் காற்றுக்கொண் டேகு நலமது போற், செறிவினைக் கீடிங் குயிர்புரி யட்டகத் தேயங் கொண்டே, யிருபொழு தேகு மிசைகருக் கொண்டிங் கெழுவகையி, னுறுதந்தை தாயிடத் தேகரு வுற்றுட லோங்கிடுமே. (50)

### எழுவகைத்தோற்றம்.

ஒண்பெற்ற தேவர் பதினுறு மானிட ரொன்ப தொடே, பண்புற்ற நாற்கால் பறவைநீர் வாழ்வன பப் பத்தென்றுற், றண்பற்றி யூர்வன பத்தொன் று தாபரந் தான்பதினெட், டெண்பத்து நான்குநூறுயிரந் தோற்ற மெழுவகையே. (51)

### நால்வகை யோனி.

ஒல்லைப் படாத விருவகை யோனிவித் திட்டதற் பின், மல்லற் புவிபுனல் பையுடன் முட்டையில் வந்து பிறந், தல்லற் படுகின்ற பல்லுயி ராயதற் கங்குரித்தல், சொல்லப் படுவன நால்வகை யோனியிற் றேற்றங் களே. (52)

### சத்ததாதுக்கள்.

சத்தவித் தானமெய்த் தாதுக்க ளாகமஞ் சாற்றி டுங்கேள், நித்தம் பொசிக்குமன் னந்தனிற் றேன்றி நெறிவழியே, செற்று மிரத முதிர மிறைச்சி செறிந் திடுந்தோன், மற்று நிணமென்பு சுக்கிலத் தாவுடன் மன்னிடுமே. (53)

### சரீரகம்.

சோரியு முதிரவச் சேற்றினிற் சுக்கில நீரொதுங் கிப், புரியுநல் விந்துவு நாதமு மேனி பொருந்தி வித் தாய்ப், பெரியநற் பேறிழ வின்பம் பிணியொடு மூப் பதுசா, வுரியவிவ் வாறு முதாத்தி லுற்றதென் றேர்ந்து கொள்ளே. (54)

புக்க மடந்தைய ரோடு புணர்ந்திடும் போதிலிங் கே, மிக்க வபான னெதிர்ப்படின் மேலிரண் டாங் குழவி, தக்க சுவாசம் வலத்தோடி லாண்பிள்ளை

தான்றரிப்ப, தொக்குமிவ் வாயு விடத்தோடிற் பெண் ணென் றுகந்தறியே. (55)

கோதைதன் கூட்டத்தில் வாயுக் குறையிற் குற ளுருவாம், போதவவ் வாயு விளக்கின் முடமென்பர் போதுவிற்கால், மீதுற வீழ்ந்திடிற் கூனுகும் வாயு விலங்கிற்பிள்ளை, மாதா வயிற்றின் மரித்தந்தத் தாயு மரித்திடுமே. (56)

கருவுறும் போதங் கிருவர்க்கும் வாயுக் கலக்க மறப், புரிவுறின் மிக்க குழவி யுதிக்கும் பொருந்துமப் போ, திருவர்க்கும் வாயுக் குழறிடிற் கர்ப்பம தில்லை யெனு, மருவும் புருடன் றனக்கெரி மிக்கின் மல டெனுமே. (57)

தாயு தரம்மல மிக்கிடின் மந்தன் சலமிகுதி,யாயிடி லூம னிரண்டொக்கி லந்தக னந்தமலர்ச், சாயிடி னும் புழுத் தான்மிக் கினுமங்கி தான்மிகினும், வாயு மிகினு மலடது மாதர்க்கு மன்னிடுமே. (58)

மண்ணுக்கிங் கொன்றரை நாழிகை யப்பில் வரு மொருகால், நண்ணுற்ற நாழிகை யங்கியி லேயொரு நாழிகைசேர்ந், தெண்ணுற்ற நாழிகை முக்காலவ் வாயு வுக் கெய்துமரை, விண்ணுக்கு நாழிகை வாயுசஞ் சாரம் விளம்பிடுமே. (59)

மருவுமிந் நாழிகை யைந்திங் கிடம்வலம் வாயு மன்னு, மிருவது மாவொரு நாழிகை யாக விசையு மைந்திற், புரிவது நூற்றெரு மாவுக் கொருவய தாய்ப் புகன்ற, விரிவின் மனித்தனுக் † காயுற்றுச் சேர்ந்த வினை வறியே. (60)

† காயுத்துச்சேர்ந்த வியனறியே என்றும் பாடமுண்டு.

தந்தைதன் வாயுவிப் பூதத்தின் மாறிச் சனிக்கு மப்போ, தந்தந்தப் பூத நிறமாகும் பிள்ளைக்கப் போ தவனுக், கெந்தக் குணம்பிள்ளைக் கந்தக் குணந்தன் னிருவினையால், வந்தித்த நூல வுடற்றந்தை தாயிடம் வந்திடுமே. (61)

சுக்கிலம் புற்பனி யிற்பாதி தானிச் சுரோணிதத் திற், புக்குறிற் புன்னை யரும்பள வாய்ச்சிவப் புற்றை ந்துநாண், மிக்குறி னீர்க்குமி ழேபோன்று மூவைந்து மேவியபின், குக்குட வண்டஞ் சிரந்திங்க ளொன்றிற் குருத்தெய்துமே. (62)

மார்பிரு தோளிரண் டாந்திங்கண் மூன்றில் வயி றதுதா, ஞர்வுறு நாலி லிருதாளிங் கைந்தி லவயவந்தா, னேர்வுறு மாறினி லாமை யுருவுறு மேழுதன்னிற், சார் வுறு மென்புசிக் கென் றிங்கு ரோமந் தரித்திடுமே. ()

பொருந்துமெண் டிங்களில் யாக்கை யுரத்துநற் போதமுற்றே, வருந்து மிருவினைக் கீடாய்ச் சனித்த வகையொன்பதிற், றெரிந்திங் கிறையடி நோக்கி மெய்ஞ் ஞானந் தெளிந்திருந்தே, யெரிந்த வுதராக் கினியைவிட் டேகிட வெய்திடுமே. (64)

## அசேஷதுக்கம்.

எய்திடும் யோனி யிடத்தினி லாலை யிடுகரும்பு, நைய நருங்கு மதுபோ னருங்குண்டு நானிலத்தே, யுய்ய விழும்வித னந்தனின் முன்னுற்ற வொண்கருத் துச், செய்வ திழந்துறு கன்மங் குவாவென்று சேர்ந் தழுமே. (65)

அறியாப் பருவந் தனிற்றுன்பம் வாசித்த லார்ந்த தொழிற், செறிவாலுந் துன்பமவ் வேட்கை முயற்சி யிற் சேர்கைதுன்பம், பிறிவாலுந் துன்பம் பொருட் டேடற் றுன்பம் பிணிவறுமை, யுறுமாகில் வெம்பிணி மூப்போ டிறப்ப துறிற்றுன்பமே. (66)

வைராக்கியம்.

தோற்றிய நான்முதற் றொட்டு விடாத துயரந் தனைச், சாற்றும் வகைமுடி யாதெனக் கேட்டுச் சலி த்துமிக, வேற்றம் பெறத்துணிந் தோர்தம் பெரு மையை யாம்பெறவே, மாற்ற மறத்துறந் தேபவ நீங் கிட மன்னுவனே. (67)

பக்துவனுராய்தல்.

மன்னும் பவத்தில் வரும்வழி யால்வரு மாதவத் தா, துன்னும் பிறப்பை யொழிக்குந் தலைவ னுகந்து நின்றே, பன்னுங் கலைப்பொருட் கேட்டன்று கண்ணி யிற் பட்டவர்தா, முன்னு முளம்பட் டுரைப்பான் செய லற வுற்றுநின்றே. (68)

பக்துவனபேட்சை.

என்றுந் தொடர்ந்து வருஞ்சகந் தையலென் பிள்ளைதன, மென்றிங் கிசைய விருக்கு முடம்பையும் யானெனவே, யொன்றி யிருந்தமை யானல வென்றுற் றுணரவெனை, யின்றுநீ காட்டி யுனக்கே யடிமை யெ ழில்பெறவே. (69)

உடலுயிர்க்கன்னியமெனல்.

கேட்டிடு மிங்கொரு தோற்பாவை தன்னைக் கிள ர்ந்தொருவ, ராட்டிட வாடி யவர்போடத் தான்விழு

மாங்கதுபோ, லூட்டி யுறக்கி யிருந்தவர் போக வுவலை யுடல், காட்டிடை சுட்டு மறியா ரறிந்தென் கருது மதே. (70)

உற்ற வுடலது காரிய மாகி லுகந்துனக்குத், துற்ற வுதிர நிணமூளை சீமலந் தோல்புனல்புண், ணுற்ற நரம்பொ டெலும்பு மயிர்வழும் பூர்புழுவாய்ப், பற் றிடுஞ் சோற்றின் பயனகு நீயல்ல பார்த்துணரே.(71)

அன்னமயமே பொருளெனக்கூறல்.

சொன்னமெய் வாயுடன் மூக்குச் செவிவிழி தூய கைகா, லென்னு முருவுடல் கொண்டிரு மாந்துமற் றெவ்வுலகு, மன்னும்பெண் பிள்ளையு மற்றுள சுற்ற மும் வாழ்வுமெல்லா, மன்ன மயத்தின் பெருமையல் லாதில்லை யம்புவிக்கே. (72)

அன்னமய தூஷணம்.

அன்ன மயங்கொண் டெடுத்த வுடல்களு மாயிழை யும், பின்னு முடன்வந்த பிள்ளையுஞ் சுற்றமும் பேருல கின், மன்னு நரைதிரை மூப்பினு நோயினு மாளக்கண் டுந், துன்னு மறிவில ரான்மா விதுவென்று சொல்லு வரே. (73)

பிராணமயம் பொருளெனக் கூறல்.

தரித்த வுடலைப் பிணமென்று வையகஞ் சாற்ற லறப், பொருத்த முறநின் றியக்கிய வாறினைப் போ ற்றுகின்ற, றொருத்த ருலகிலிங் குண்டே லுறக்கத்தி லுற்றதனைப், பெருத்த பிராண மயமத லாதென் கொல் பேசுவதே. (74)

### பிராணமய தூஷணம்.

ஊசு முடலி லுழல்கின்ற காற்றை யுணர்வென்ப ரே, யேசு முறக்கத் தியங்கியு மிங்கறி வேதுமற்று, வீசும் பிராணனை யான்மா வலவென்று வேதஞ்சொல் லும், பேசு மனிதர் பொருளறி யாமற் பிதற்றுவரே.

### மனோமயம் பொருளெனக்கூறல்.

நெறியுற் றிடாத பொறிபுலன் வாழ நிலையளித் துச், செறிவுற்று நின்ற பிராண மயத்தைச் சிதைவற வே, பிரிவுற் றிடாம லடக்கி யியற்றிப் பிழையறவே, யறிவுற்று நின்ற மனோமய மன்றி யறிவில்லையே. (76)

### மனோமய தூஷணம்.

தனக்கு மனது சலித்ததென் றேசொல்லித் தா னிருந்து, முனக்கு விசாரமுண் டாகிற்சொல் லென் றிங் குவந்துநின்று, மெனக்கிங் கறியவொண் ணு தென்று சொல்கின்ற வேழைகடா, நினைக்கத் தனக் கறி வில்லா மனத்தை நிலையென்பரே. (77)

### விஞ்ஞானமயம் பொருளெனக்கூறல்.

பொறியுற்று நின்ற மனோமயந் தன்னினற் புத்தி நின்றே, யறிவுற் றிடிலிச்சை கோப முபாய மதன் மதன்மஞ், செறிவுற்ற துக்கஞ் சுகம்பயில் வாதனை சேர்தவமும், பிறிவற்ற ஞான மயம்புத்தர் தம்மதம் பேசிலின்றே. (78)

### விஞ்ஞானமய தூஷணம்.

இணங்கு நவகுண மெய்துமிப் புத்தியை யின்று புத்தர், வணங்கும்விஞ் ஞான மயம்பொரு ளென்ற மதியின்மைபோற், பிணங்கு நிலைவிட்டுக் கேளாய்

மறையின்று பின்னமறக், குணங்குணி யின்றி யிருக்கு மான் மாவெனக் கூறிடுமே. (79)

### ஆனந்தமயம் பொருளெனக்கூறல்.

சாற்று முறக்க முதன்மனம் புத்தியைச் சார்விடயத், தோற்ற மினிய சுகம்பல வாகமுன் சொல்லு கின்ற, வேற்றம் பெருவடி வாகநின் ருலித் திருமை பெறப், போற்றுமா னந்த மயமதல் லாதொரு போத மின்றே. (80)

### ஆனந்தமயதூஷணம்.

சேருஞ்சுகம்பொரு ளென்றனை துக்கஞ் செறியும் பொழு, தாருஞ் சுகதுக்கி யாகி யிடுநிலை யன்றிமறை, தேரு நிரதி சயானந்த மேசிதை வற்றபொருள், கூரு நிலையை யறியா ரழிசுகங் கொள்ளுவரே. (81)

### கோச தூஷணம்.

வளர்க்குநல் லன்ன மயமும் பிராண மயமுடனே
கிளர்க்கு மனோமய மாகிநின் றுனையுங் கிட்டநின்றே
விளர்க்கும்விஞ் ஞான மயனரு காகவு மேவிநின்றங்
களக்குமா னந்த மயத்துட னைந்துமிங் கன்னியமே. ()

சொன்னநற் கோசத்தை மாயமென் றேசொன்ன தூயவனே, பன்னுமைம் பூதங்கள் பஞ்சி கரித்த பரிசு தன்னை, யுன்னும் படியின் றடியேன் றனக்கிங் குணர்த் திடுநீ, மன்னும் படிசொல்ல வாரா யுனக்கு வளம் பெறவே. (83)

### தோற்றம்.

போங்கு மனலிற் புலிங்கமும் மப்பினிற் புற்புத மும், வெங்கதி ரிந்து விரிந்தெழு மேகமு மேவுதல்

போற், றங்குஞ் சிவத்தினிற் சிற்சத்தி மாயை சராசர மாய்த், துங்கவைம் பூதங்க டத்துவ மானவை சொல் லுதுமே. (84)

சிவத்திற் பிரளய சிற்சத்தி மாயை சிறந்துசிறந், தவத்திலைம் பூதங்க ளொன்றிலொன் றுயைந்து பூதமு மா, யிவற்றினு லையைந்து பஞ்சீ கரித்திங் கிவையுல காய், நிவப்புறு கின்ற சராசர மாகி நிகழ்ந்திடுமே. ()

பஞ்சீகாணம்.

அறியுஞ்சிற் சத்திமுன் னம்பரங் காலங்கி யப்பு மண்ணுய்ப், பிறியுமைம் பூதமுஞ் சூக்கும தூலங்கள் பேசப்பத்தாய், நெறியுறுஞ் சூக்கும நிற்கவித் தூல நிகழ்த்துமைந்துஞ், செறியுமிவ் வொன்றென்று நந் நான்க தாகிச் சிறந்திடுமே. (86)

நீங்கிய வான்பங்கு நான்கதி லேயொன்று நீடிய கா,லாங்கமர்ந் தான்மன மாகுமற் றென்றுசென் றங்கி யினிற், றேங்கிடப் புத்தியொன் றப்பினிற் சேர்ந்தி டச் சித்தமொன்று, நாங்கொளு மண்ணுறி லாங்கார மற்றது ஞாதுருவே. (87)

வாயுவின் பங்கொரு நான்கதி லேயொன்று வானி லுறத், தோயுஞ் சமானனென் றங்கி யுதானனற் றே யத்திலே, பாயுமொன் றென்னி லபான னிலத்தொ ன்று பற்றிடவே, யாயும் பிராணன்ற னம்சம் வியான னறிந்திடிலே. (88)

தூயழற் பங்கொரு நான்கொன் று வானுறிற் சோத்திரமொன், றேயொலி சேரிற் றுவக்கொன் றுவ ப்பி னெழிற்சிங்குவை, யாயொன்று பாரினி லாக்ராண

மாகுமற் றங்கிசமு, நேய முடன்சட்சு வாகுமென்
னுரண நேர்சொல்லுமே. (89)

சலத்தினிற் பங்கொரு நான்கொன்று வானுறிற் சத்தமதாம், பெலத்தொன்று வாய்விற் பரிசம தாமொன்று பேரழலிற், செலத்தங் குருவமொன் றம்புவி சேரிற் சிறந்தகந்த, நலத்தநல் லம்ச மிரதம தாக நயந்துகொள்ளே. (90)

மண்ணினிற் பங்கொரு நான்கொன்று வானுறில் வாக்குநற்கால், நண்ணிவந் தொன்றுறப் பாதநல் லங்கியி னுடவொன்றங், கண்ணிய பாணியொன் றப்பிலடைந்திடப் பாயுருவாங், திண்ணிய வம்ச மதுவே யுபத்தந் தெளிந்துகொள்ளே. (91)

வான்கூறு நான்கு கரணம் வளியினில் வாயுவைந்தும், யான்கூறு தீயினிற் சோத்திர மைந்து மெழுசலத்தில், வான்கூறியபுல னைந்துந் தரணியில் வாக்கைந்துமே, தான்கூறு ஞாதுரு தன்னொடிங் கையைந்து தானறியே. (92)

மஹாபூதாஷ்டகதணம்.

விரிந்திடு பூத மிவையின் குணங்கள் விசேடமது
பரிந்தசொருபஞ் சுபாவ மதனின் † பணிநிறஞ்சேர்ந்
திருந்த வுருவோ டதிதெய்வங் கூடு மிவையெட்டையுந்
திருந்த வுரைப்ப னிதனையுங் கேளாய் சிறப்புறவே. ()

பெருவான் குணிகுணஞ் சத்தம் விசேடம் பெயர் சிறப்பாஞ், சருபாவ தாவெளி யாகு முரைத்த சுபாவ நிலை, தருமா னிறம்புகை தன்பணி யாவ திடங்

† பணி நிறஞ்சோல், இருந்த என்றும் பாடமுண்டு.

கொடைதா, னுருவாகும்வட்டஞ் சதாசிவன்றேவதை யுற்றறியே. (94)

தென்றற் குணநற் பரிசம் விசேடந் தெரிவரிது
நன்றிற் சுருபஞ் சலித்தல் சுபாவ நலம்விரித்தல்
துன்று நிறமுங் கருமை பணியுஞ்சொற் கூடுமென
நின்ற வுருவறு கோண மயேசுர னேர்தெய்வமே.(95)

தீயின் குணம தொளிநல் விசேடந் திகழ்பெருமை
தோயுஞ் சுருபஞ் சுடுதல் சுபாவந் தொடர்ந்தெழுத
லாயுநிறஞ்செம்மை யாம்பணிசுட்டொன்ற லாக்குமுரு
நீயின் றறியின்முக் கோண முருத்திர னீடெய்வமே.()

அப்பின குணம திரதம் விசேட மதுபெருமை, செப்புஞ் சுருப நெகிழ்தல் சுபாவநற் சீர்சுழித்த, லொப்பி னிறம்வெண்மை யோதும் பணிசிறை யுற்றவுருத், தப்பற வெண்பிறைச் சந்திரன் மாதவன் றுன்றெய் வமே. (97)

விளங்குமண் ணுற்ற குணிகுணங் கந்தம் விசேட நுண்மை, கிளர்ந்த சுருபங் கடினஞ் சுபாவங் கிடை நிறம்பொன், வளந்தரு மித்தின் பணியோ பொறுத் தன் மகிழ்ந்தறியில், விளங்குரு நாற்சது ரம்பிர மாத் தெய்வ மேலறியே. (98)

எண்ணுற்ற பூதத்துக் கெய்துமூ லாக்கர மிங்கிதனி
னண்ணுற்ற மந்திர மாயுதஞ் செப்பு நலமதுகேள்
விண்ணுற் றெழுத்த துகாரமீ சான மிதன்மந்திரந்
தண்ணுற்றவாயுதந் தான்மூலவிந்தது சாருமெண்ணே.

சாருநற் காற்றுக் கெழுத்தது வவ்வெனுந் தற் புருட, மாருமிம் மந்திரங் கட்க மரபுளி யங்கியினுக்,

கோருமெழுத்த துகார மகோரமுறுமந்திரஞ், சேருஞ்
சுவத்திக மாயுத மாமென்று செப்பிடுமே. (100)

அப்புக் கெழுத்தது மவ்வெனும் வாம மதுமந்
திரந், தப்பற வாயுதங் கோகன கம்மத் தரணியினுக்,
கொப்பற்றவக்கர முஞ்சத்தியோசாதமொண்மந்திரஞ்,
செப்புற்றவச்சிரந் தானுயுதமெனத் தேர்ந்தறியே. ()

பூதத்திற்குப் பஞ்சாக்கரம் நிற்குமுறை.

விகாரஞ் செறியுமிப் பூதபஞ் சாக்கர மேவுதல்
கேள், நகாரம் பிருதிவி மகார மதுவப்பு நண்ணுமிந்தச்,
சிகாரமுந்தேயு வகாரமும்வாயுச் செறிந்துநிற்க, யகார
மெனுமெழுத் தாகாச மாகு மியல்பதுவே. (102)

பூதவியற்கை.

செற்றுமைம் பூதந் தனக்கிங் கியற்கையைச் செப்
பிடுங்கால், மற்றுமிவ் வானுக்குச் சத்தம தாகுமவ் வா
யுவுக்குப், பற்றுமிவ் வோசை பரிச மிதற்குப் பகரிலங்
கிக், குற்றிடுஞ் சத்த பரிச முருவ முகந்தறியே. (103)

சலத்துக்குச் சத்த பரிச முருவநற் சாரிரத
நிலத்துக்கு மோசை பரிச முருவ நிகழிரத
நலத்துற்ற கந்த மிவைதமை நீயிங்ஙனண்ணிநின்று
மலத்துற்று நின்றவிப் பூத வியற்கை மதித்தறியே. ()

வாயு விடமனஞ் சஞ்சல மாய்நினை வாகும்புத்தி,
தோயுநல் லங்கி யிடநிச் சயம்பண்ணத் துன்னுஞ் ‡ சித்
த, மாயுமதப்பிட மாகியங்குட்கொண் டதுசலித்தான்,
மாயு மகங்கர மண்ணிட மாயபி மானிக்குமே. (105)

‡ சித்தத், ததாயும தப்பிட மாயதங்குட்கொண் டதுசலி
த்து என்றும் பாடமுண்டு.

### காரணபூததேவதை.

வாய்ந்த மனத்துக்குச் சந்திரன் றெய்வ மதித்த புத்திக், கேய்ந்த பிரம னதிதே வதையென் றியம்புஞ் சித்தத், தாய்ந்த வரியிங் கதிதே வதையகங் காரமதிற், ரேய்ந்த வுருத்திரன் றெய்வமென் றேமறை சொல் லிடுமே. (106)

வானிடஞ் சத்தங்கள் கேட்குஞ் செவியிடை வாயுவிட, மூனறுந் தோல்பரி சங்களை யோருமுற் றங்கி யிட, மானனை யாய்விழி காணு முருவமற் றப்பிடநாத், தானே சுவைக்குங் குமிழ்மண்ணி டங்கந்தந் தா னுறுமே. (107)

சோத்திரத் துக்கதி தேவதை திக்குத் துலங்குந் தொக்குக், காற்றவிவ் வாயு வதிதே வதையென் றறி யுஞ்சட்சுக், கேற்ற வதிதெய்வம் பானுவுஞ் சிங்வைக் கிசைந்ததெய்வஞ், சேர்த்த வருணன் றரணியாக் ரா ணத்தின் றெய்வமென்னே. (108)

வாயது வானிட மாய்வச னிக்குங்கை வன்னியிட
மாயிடுந் தானநற் கால்வா யுவினிட மாங்கமனம்
பாயுரு வப்பிட மாய்விசர்க் கத்தைப் பரிந்தொழிக்குந்
தீய வுபத்தமிம் மண்ணிட மானந்தஞ் சேர்விக்குமே.

வாக்கி னதிதெய்வ மங்கிநற் பாணிக்கு வாய்த்ததெய்வ
மாக்க முறுமிந் திரன்மாலிப் பாதத்துக் கானதெய்வ
¶ நீக்க முறுபா யுருவுக் குருத்திர னோர்தெய்வங்கள்
போக்கறு நல்லுபத் தத்ததி தேவதை பூமகனே. (110)

---

¶ நீக்க முறும்பா யுருவிற்கு நைருதி என்றும் பாடமுண்டு.

### புறநிலைப்பஞ்சாவத்தை.

உண்ணிலை யிற்பஞ்ச விம்சதி சொன்ன வுவமை யைப்போ, லெண்ணும் புறநிலை யிற்பஞ்ச விம்சதி யின் றெனக்கு, நண்ணி யிவையிங் குடலாய்த் தொடுத்த நலமடியேன், றிண்ணம் பெறவருள் கேளா யிதனைத் தெளிவுறவே. 111

நாடி மயிர்தசை தோலோ டெலும்புநற் பூமியின்கூ
றோடிய நீர்நிணஞ் சுக்கில மூளை யுதிரமப்பிற்
கூடிய கூறு கடும்பசி சோம்புகொட் டாவிதுயி
லூடிய மைதுன மங்கியின் கூறென வுற்றறியே. 112

ஓங்குத லோட விருத்தல் கிடத்த லுகந்துநின் றுவாங்குதல் வாயுவின் கூறென் றறிந்துபின் மன்னி நின்றே, பாங்குறு வெட்கம் பகைவேட்கை லோபம் பயமுமெல்லா, நீங்குத லின்றிய வான்கூ றெனவின்று நீயறியே. 113

### தசநாடி.

நாடிகள் பத்து முறைத்திடக் கேளாய் நலம்பெறவே
யோடு சுழுமுனை யுற்ற விடைபிங் கலையி லுறைந்
தாடுநற் காந்தாரி யத்திசிங் வையு மலம்புடையுங்
கூடிய விந்தப் புருடன் குருசங் கினிகுறியே. 114

உற்ற சுழுமுனை யாதார மாறுமிங் கூடுருவ
மற்றுமிடைபிங் கலைகத் திரிகைமன் காலதுபோற்
சுற்றியிடவந்தக் காந்தாரி நாபியிற் றோன்றியெழுஞ்
சத்தமிங் கேழுக்கு நாடியே மாய்க்கண்டந் தானுறுமே.

அத்திநற் சிங்குவை தான்பத்து நாடியுற் றுருங் கண்ணிற், செற்று மலம்புடை சேர்ந்த புருடன் செவி

யினரம், புற்றிடு நூறிரு பாற்குகு நாபி யுறைந்துகுப்
யம், பற்றும்பின் சங்கினி நாபி யுபத்தத்தின் பானண்
ணுமே. 116

தசவாயு.

கூடும் பிராண னபானனன் னுகனுங் கூர்மனுற்ற,
தோருஞ் சமானன் கிரிகரன் மற்ற வுதானனிலே, சேரு
மத் தேவதத் தன்பின் வியானன் செறிந்துபெற்ற,
தாருந் தனஞ்சய னீரைந்து வாயு வறிந்துகொள்ளே.

பிறிவற் றிதய மிருந்துமே ஞேக்கும் பிராணன்
குத, நிறைவுற் றிருந்துகீழ் நோக்கு மபானனின் னுபி
யிலே, யுறையுற் றிரண்டுஞ் சமானன் சமன்செ யுதா
னன்கண்டஞ், செறிவுற்றுச் சத்திக்கு மெங்கும் வியா
னன் செறிந்திடுமே. 118

நாகனும் விக்கலுண் டாக்கிடும் கூர்மனு நல்வி
மைப்புக், காகரங் கானுங் கிரிகரன் றும்மலுண் டாக்
குந்தத்தன், மோகர முற்றிடு மூரிகொட் டாவி முயற்று
முயிர்ச், சாகலும் வீங்கி வெடிக்குந் தனஞ்சயன் சார்
விதுவே. 119

சடாதாரம்.

நிலவி யமர்ந்திடு மாதார மாறையு நீயறியிற்
குலவிய மூலத்தி லாதார நாவிதழிற் கொண்டுகுத
முலவுஞ் சுவாதிட்ட மாறிதழ் குய்யம துற்றிருக்கு
நலவிய பத்தித ழாமணி பூரக நாபியுற்றே. 120

ஈரா றிதழை யுடைய வனுகதந் தானிதயம்
பேராம னிற்கும் விசுத்தியீ ரெட்டிதழ் பெய்துகண்ட
நேராக நின்றிடு மாக்கினை யீரிதழ் நெற்றிநடு
வாராய்நிலைபெற்ற வாதார மாறு மறிந்துகொள்ளே.

விளம்பிய மூலத்தில் வம்முத னென்கும் விநாயகனு
மளந்த சுவாதிட்ட மானதிற் பம்முத லாறயனும்
வளர்ந்த மணிபூ ரகத்தினுள் டம்முதல் வந்தபத்தாங்
கிளர்ந்தவத் தெய்வமு மாலாகு மற்றதுங் கேளினியே.

உதிக்கு மனகதங் கம்முத லீரா றுருத்திரனு
மதிக்கும் விசுத்தியி லீரெட் டுயிர்கண் மகேசனுறும்
விதிக்குநல் லாக்கினை மேவும் ஹக்ஷ விளங்குதெய்வம்
பதிக்குஞ் சதாசிவ மத்திமத் தேயகப் பாலிக்குமே.

## மும்மண்டலம்.

நாற்சது ரத்தி னடுமூன்று கோணத்தி னுலிதழி
னூர்த்த சிவப்பு மடைந்திடு மக்கினி மண்டலந்தான்
கோத்த பிருதிவி யப்பது கூடுங் குறியிடத்தே
யூற்றம் பெறநின் றிடுமென மாமறை யோதிடுமே. 124

எட்டித ழோடறு கோண நிறம்பொற் பளிங்கெனவே
கட்டற வாதித்த மண்டல மங்கிநற் கானடுவே
முட்டிய வாழை முகிழ்போற் கவிழ்ந்த முகிழ்தனிலே
மட்டவிழ் சத்திக ளெட்டென வாழு மனோன்மனி
[யே. 125

சந்திரன் கோடி யுதயம தாமெனத் தானதுற்றே
விந்தநற் சந்திர மண்டல முற்றிங் கிருக்குமிட
மந்தர மான கபால மதனி லமுதகலை
முந்திய யோகம் பராசத்தி வாழு முறைமையிதே. 126

## நவத்துவாரமும், வினையும், பிணியும்.

காதுகண் மூக்குநல் வாயுங் குதமுங் கருதுபத்த,
மோதுநல் வாயில்க ளொன்பதென் றோரிங் குறும்

வினைக, ளேதெனிற் புண்ணிப பாவம் பிணிய தியம்பு
வன்கேள், வாதமும் பித்தமுஞ் சேத்தும மென்றிங்
ஙன் மன்னிடுமே. 127

எண்வகை விகாரம்.

காமக் குரோத முலோபமு மோகங் கருதுமத
மாமிக்க மாச்சரி யத்தோ டிடும்பை யசூயையிவை
தாமுற்ற நல்வினை தீவினைக் கிடு சரிக்குமுடன்
மீமுற்று நிற்கின்ற வெண்வகை யான விகாரங்களே.128

முக்குணம்.

கோலைபொய் யொழிதல் வறியார்க் கிடுகை குண
மொழுக்க, நிலைபெறு மன்பு பொறையா லுயர்ச்சிநிந்
திப்பொழித, லலைபொரு டேடு மவாவின்மை யோடங்
கடக்கமுறல், கலைபல கண்ட கணக்கிது சத்துவங்
கண்டுகொள்ளே. 129

புத்திக் குறிப்புட னுகி யிருந்து புகழ்படைத்த
னித்தங் கொடையது வேண்டி யிருத்த னிலையிடும்புக்
கொத்திடு மோகம் புணர்ச்சி யசேதன மொத்தனவு
மித்தனை யும்மிவை ராசதத் தின்குண மென்றுகொள்
[ளே. 130

உறக்கம் வெகுளி கனவுற் றிருந்திங் குளமயங்கி
மறக்கு மதுவுண்டு சோம்பா யிருந்து மயங்கிநின்றே
சிறக்கு மவையறி யாதே சிரித்தல்பொய் சேர்ந்தவிவை
பிறக்குங் கடிய பெருந்தா மதகுணப் பெற்றியவே.131

மும்மலம்.

சேர்ந்த தனுகர ணங்களை நானென்று சீவனுற்றே,
போந்ததி னுற்பொருண் மேலிச்சை யாயெதிர் பொங்கு

சின, மார்ந்த விகற்பமு நிச்சய போக மடைந்தவகை,
நேர்ந்த குறைமயக் கென்னுமை லாணவ நின்றிடுமே. 132

அன்னிய மான தனுகர ணங்களு மாயபொரு,
ளுன்னிய வாகண்டு கேட்டுண் டுயிர்த்திட் டுறுபரிசம்,
பன்னிய பொய்கொலை தாழ்வு குருவைப் படிறுரைத்
தன், மன்னிய தன்மை யறியா துயிருக்கு மாயையி
தே. 133

விருப்பு வெறுப்பொடு சேரு மிதமகி தம்விடய,
மிருப்பது போக மிடும்பையு யுத்த மிசைந்த பயம்,
பெருப்பது பாவ நடுவின்மை யாலவை பெய்துகொண்
டே, கருப்புகு நல்வினை தீவினை யால்வருங் காமியமே.

மகாமாயை, திரோபாவம்.

தனுகர ணம்புவ னம்போக மான தரங்களுற, வனு
பவ நண்ணு மகாமாயை யான தறிசிவத்தை, முனுயு
யிர் தானறி யாமற் றிரோதமு மூடும்வினை, யெனுமது
பாகம் வரினுந் திரோத மிரட்சிக்குமே. 135

பஞ்சாவத்தை.

உதிநாற் கருவி யுடன்புரு வத்துற் றுணர்நனவா
மிதினு லு கண்டத் திருத்தல் கனவிங் கிரண்டிதய
மதுதா னுறைதற் சுழுத்தி யதிலொன்று நாபியிலே
பதிவாங் துரிய மதீதமு மூல மெனப்பகரே. 136

அவஸ்தாந்திராவஸ்தை (வேறவஸ்தை).

நனவி னனவு புலன்வழக் கம்மது நண்ணிடுங்கேள்
நனவிற் கனவு மனநினை வாகுமிங் நாட்டமற
நனவிற் சுழுத்தி மனநினை வின்மை நலமதுற்ற
நனவிற்றுரிய மறிந்தபிதென் றேசொல்லு நான்மறையே.

கனவி னனவது போற்கண்டிங் குற்றது காணனவு
கனவிற் கனவுமுன் காட்சி மறத்த லெனுங்கவலை
கனவிற் சுழுத்தி வியோம மெனக்கண்டு கண்ணநின்ற
கனவிற் றுரிய மெனுமறை யோதுங் கருத்திதுவே. 138

சுழுத்தி நனவொன் றுந் தோன்று திருந்திடந் தூயவனே, சுழுத்திக் கனவது தோன்றுமை கண்டதைச் சொல்வதுதான், சுழுத்திச் சுழுத்திமுன் கண்டதழிந்திடுஞ் சொல்லறவே, சுழுத்தித் துரியமுஞ் சொல்லறப் பாழெனுந் தூய்மறையே. 139

துரிய நனவிங் கிதமுணர் போத மெனச்சொலக் கேள், துரியக் கனவிங் ககமுணர் போதமிச் சொல்லு மற்ற, துரியச் சுழுத்தி வியோம மெனக்கண்டு துன்னி நின்ற, துரியத் துரியம் பரமென வேமறை சொல்லிடுமே. 140

## தொண்ணூற்றறுதத்துவம்.

ஆத்தும தத்துவ நாலாறு நாடிபத் தஞ்சவத்தை, தோற்ற மலங்குண மண்டலம் ரோகந் தொகுத்தமுந் நான், சேற்ற விகாரமெட் டாதார மாறெழு தாதுவளி, சேற்றன பத்தைந்து கோசமெய் வாயிற் றிறமொன் பதே. 141

## வேதாந்ததத்துவம்.

குறைவற்ற ஞானிகள் வேதாந்த தத்துவங் கொள்வதுகேள், பொறையுற்ற வாத்தும தத்வமெண் மூன்று புருடனுடன், கறையுற்ற கால பரமோ டதீதங் கருதரிய, நிறையுற்ற தற்பர மோடிரு பத்தெட்டு நீயறியே. 142

சைவ சித்தாந்தம்.

துலங்கவே தாந்தத்தின் ஞேற்ற முரைத்த துணை முதலே, நலங்கொளுஞ் சைவசித் தாந்தத்தின் ஞேற் றமு நாயடியே, னிலங்க வறிய :வியம்பிடு நீசொல்வ னிங்கறியக், கலங்குநிலேயின்றிக் கேளாயிதனைக் கருத் துறவே. 143

பத்திமுத் தீவயி ராக்கியத் தான்மலம் பற்றறுக்க
வுற்றசரியை கிரியையொண்யோகருக் கொண்பதங்கள்
செற்றிய சாலோக சாமீப சாரூபஞ் சேருமினி
மற்றுயர் ஞானமுற் றுர்கள்சா யுச்சியமன்னுவரே. 144

சரியை.

திருக்கோ யிலுக்கல கிட்டு மெழுகிட்டுத் தீபமி ட்டுப், பருக்கோடு நந்த வனம்வைத்துப் பூக்கொய்து பாடியத்தால், விருப்போடு சுற்றிய வேடம் பணிந்து வியன்சரியைக், கிருப்பார்க்கு நற்சிவ லோகமென் றுகம மெண்ணிடுமே. 145

கிரியை.

மிகநீறிட் டுப்பஞ்ச சுத்தி துவாரம் விசேடார்க் கிய, மகபூசை யாசன மஞ்சன மாவா கனமர்ச்சனை,தக வோமஞ் சோடசம் பஞ்சா வரணஞ்சண் டாதியுடன், சுகபூசைசெய்கிரி யைக்குச்சா மீபமுந் துன்னிடுமே.

யோகம்.

குணம்புலன் மூன்றைந் தடக்கி யிருவளி கூட டைத்து, வணங்குஞ் சுழினை வழியேற்றி மன்னிய தாண்டவத்தி, விணங்குஞ் சிலம்பொலி கேட்டுற் றவ

ரெழில் வேட்டுவன்போர், லணைந்து சிவனுரு வாகுவர்
யோக மடைந்தவரே. 147

### ஞானம்.

சன்மார்க்க முற்றநல் வேதாக மங்களுஞ் சார்ந்து
மயல், பன்மார்க்க முற்ற சமயம்விட் டப்பதி பாசம்
பசுத், தன்மார்க்க முத்தியிற் றத்துவ நீங்கித் தனைய
றிந்த, நன்மார்க்கந் தான்சிவ னோடங் கழுந்துதன்
ஞானமெண்ணே. 148

### மூவகை யாத்துமாவிற்கு முபதேசித்த முறைமை.

ஓங்கும்விஞ் ஞானகர்க் கோர்மல நீக்க வொளியு
ருவாய்த், தாங்கும் பிரளயர்க் கிர்மல நீக்கச் சதுர்ப்பு
யங்கொண், டாங்கதி னேங்குஞ் சகலர்க்கு மும்மல மா
ய்ந்தறுக்கப், பாங்குறு திவகம் போலுருக் கொண்டு
பரன்வருமே. 149

### பதி பசு பாசத் தொகுதி.

பதிபசு பாசங்கண் மூன்றின் முறைமை பகரு
வன்கேள், பதியுஞ்சர் வஞ்ஞன் பரிபூ ரணனிப் பசுவி
னுண்மை, பதியிங் குணர்த்த வுணருமென் றுற்றறி
பாசமது, கதியினும் பெத்தந் தனிலு மறிவிலை கண்டு
கொள்ளே. 150

### பதிலட்சணம்.

பதிபல் லுயிர்க்குயி ராயிசை ஞானம் பகர்கிரியை
யிதுவடி வாமவ னவளது வாகியுற் றெவ்வுயிர்க்குங்
கதிநர காம்வினைக் கார்வித் தபனரி கண்டளிக்க
வதுவங் கழித்திளைப் பாற்று மரனருட் டானறியே.

பசுலட்சணம்.

அளவற் றழிவற்று மும்மல மூடிடு மவ்வினைக்கீ
டுளசிற் பரனரு ளாற்றனு போகங்க ளுற்றவையாய்
விளைவுற் றிருக்கு மலபாக மேவின் மிகுமிருள்போய்
வளமுற்ற விசனற் பாத முறும்பசு வர்க்கங்களே.152

பாசலட்சணம்.

ஒன்றாகி யென்று மொழிவற் றுயிரை யுறமறைத்து, நின்றாருஞ் செம்பினிற் காளித மேயென நிற்கு மல, நன்றாகத் தத்துவஞ் சேட்டித் தெனுமிவை நாடரிதாய்ப், பின்றாழ் வறநின்ற பேரந்த காரத்தின் பெற்றியதே. 153

சிவனி னிச்சாஞானக் கிரியை.

சிவனிச்சை ஞானக் கிரியா சொரூபமுஞ் செப்புதுங்கேள், சிவனுயிர் முத்தியிற் சேர்ப்பதிங் கிச்சை திருவுளத்தே, சிவனவர் கன்மங்க டோர்வது ஞானஞ் செறிவினைகள், சிவனவர்க் கூட்டி யுறக்கித் தொலைப்பிக்குஞ் செய்தொழிலே. 154

ஆத்துமாவி னிச்சாஞானக்கிரியை.

ஆன்மா வுறுமிச்சை ஞானக்கிரியை யறைந்திடக்கே, ளான்மாவிப் பண்ட பதார்த்தங்கள் பற்றிநின் றார்தலிச்சை, யான்மாவிப் பண்டம் பகுத்தாய்தன் ஞானமிப் பண்டந்தன்னை, யான்மா வெனதென் றழுந்தல் கிரியை யறிந்துகொள்ளே. 155

தோற்றம்.

ஆரும் பரம சிவத்தினிற் சத்தி யதிற்குடிலை
சேருங் குடிலையி னுதமு நாதத்திற் சேர்ந்தவிந்து

சாருநல் விந்திற் சதாசிவந் தோன்றுஞ் சதாசிவத்திற்
கூரு மயேச மயேசத்தில் வித்தையுங் கூடிடுமே. 156

பற்றிமுன் சொன்னநல் விந்துவிற் சூக்குமை பைசந்தியு, மற்றுமிம் மத்திமை வைகரிநான்கெனும் வாக்குகளி, லுற்றிடு மைம்பத்தோ ரக்கர மும்மங் குதித்ததிலே, துற்றிடுஞ் சத்த மகாகோடி மந்திரந் தோன்றிடுமே. 157

நீடு மனந்தர்முன் மாயையிற் கால நியதிகலை
யோடங் குதிக்குங் கலையினில் வித்தை யுதித்ததிலே
யாடு மிராக முதித்தங் கதிலுயி ராயுதிக்கும்
பீடு பிரகிர்தி யோடு குணங்களும் பின்னுறுமே. 158

போற்றுநல் லவ்வியத் தத்தினிற் சித்தமும் புத்தி யுந்தான், றேற்றிடும் புத்தியி லாங்காரந் தோற்றிடுந் தோன்றுமிதி, லாற்றிடுந் தைசதம் வைகரி பூதாதி யாங் கொருமூன், றேற்றகங் காரங்க டம்மி லுதிப்ப திசைந் தறியே. 159

தைசதந் தன்னிடை சாத்து விதகுணஞ் சார்ம னமோ, டெய்துஞா னேந்திய மாம்வை கரியி னிராசத மாம், வெய்ய குணங்கன்ம விந்தியந் தோன்றுமிப் பூதாதியிற், றய்ய குணமுடைத் தாமசத் தாதிக டோன்றிடுமே. 160

பன்னிய சத்தத்தி லாகாசந் தோன்றும் பரிசத் திலே,துன்னிய வாயு வுதித்தங் குருவத்திற் றேன்றும ங்கி,யென்னு மிரதத்தி லப்புறுங் கந்தத்திற் பூமியுமுற், றுன்னு மிவையங் குதித்தடை வேயின் னெடுங்கிடுமே.

கந்தந் தனின்மண் ணிரதத்தி னீருரு வத்திற் கனல், தந்திடும் வாயு பரிசத்தில் விண்சத்தந் தன்னி லேந்து, மந்தக் குணமுற்ற பூதாதி யாங்காரம் வாக்கு முத, னந்தச்சொல் லாதி யிராசவை காரியி னண்ணி டுமே. 162

சாத்து விதகுணத் தாங்கார தைசதந் தன்னின் மனஞ், சோத்திர மாதி யொடுங்குமிம் மூன்றுஞ்சொற் புத்தியிலே, யார்த்திடுஞ் சித்தமும் புத்தியுமவ்வியத் தோடொடுங்குஞ், சேர்த்தவ் வியத்தம் பிரகிர் தியிற் பற்றிச் சென்றிடுமே. 163

செல்லும் பகுதி கலையினிற் சேர்ந்தபின் சேர் வித்தையைச்,சொல்லுதுங் கேளினி ராகமும் வித்தை யிற் றாயவித்தை, நல்ல கலையிற் கலையுநியதியி னண் ணியது, புல்லிய காலத்தி லிவ்வைந்து மாயையிற் போந்திடுமே. 164

சோல்லய னுதி யதிபதி யாய்த்தொடர் சுத்தவித் தை,வல்லவத் தீசுரத் தேயீ சுரம்வளர் சாதாக்கிய, மெ ல்லவிதுமந்ர மக்கரம் வாக்குடன் விந்துவிலே, யொல் லுமிச் சத்தி சிவமெனு நாதத் தொடுங்கிடுமே. 165

ஒடுங்கியநாதங் குடிலையிலேயுரைக் கும்மிரண்டும்
படுங்குண மாயைப் பராசத்திக் கேயப் பராசத்தியு
நெடுங்குண மான வருளிட மாமந்த நீடருளுங்
கெடுங்குண மற்ற பரமசிவனிடங் கிட்டிடுமே. 166

### ஆத்துமதத்துவம்.

பூதமிங்கைந்துஞா னேந்திய மைந்து புலனுமைந் திங், கோதுங்கன் மேந்திய மைந்து கரணமு முற்றது

நான்,கிதின்றொகைக ளிருபத்து நான்கி னெழிலதனைப்,
பேதங்கொ ளாத்தும தத்துவமென்று பிறித்தறியே.

### வித்தியாதத்துவம்.

ஏறிய கால நியதி கலைவித்தை ராகமொடே
கூறிய நல்ல புருடனு மாயையுங் கூடிநின்றே
மாறி யிவைசெயும் வண்ணமு மிங்கு வளம்பெறவே
தேறும் படியுரை கோவே யெனக்குத் தெளிவுறவே

### காலம்.

மூன்று வகைப்படுங் காலஞ்செல் காலமுற் கன்மத்திலே, யூன்றும் படிசென் றுறுநிகழ் காலமிங் குற்ற பண்ட, மேன்றுஞ் செலுத்தும் வருங்கால மொன்று மிலாததுபோற், றேன்றும் படியுற் றுகந்திடுங் காணிவை தோய்ந்தறியே. 169

எய்திடுங் கன்மத்துக் கிடரா சாக்கினை யிட்டது போற், செய்துநிறுத்து நியதிமலத்தைச் சிறிதொதுக்கிப், பையவிச் சத்தியி னுலே கிரியை பயிற்றுங்கலை, துய்ய கிரியை யுடன்ஞான மோர்விக்குந் தொல்வித்தையே. 170

பேற்றதைத் தான்சிறிதாக்கிப் பெருதகின் மேற்பிரியும்,பற்றுமிராகமிப் பஞ்சேந்திரியம் பகுத்தறியச், சுற்று மிருகொள்ளி வட்ட மெனப்புரு டன்சுழலு, மற்றும் விடய மிரண்டற மாயையு மன்னிடுமே. 171

### சிவதத்துவம்.

சார்வுறு நற்சுத்த வித்தையொ டீசுரஞ் சாதாக்கியஞ்
சேர்வுறு மிச்சத்தி தத்துவத் தோடு சிவதத்துவ

மார்வுறு கின்ற வவையின் ஞெழிலையடியனுக்குத்,தோ்
வுற வேயருள் கேளா யிதனைத் தெளிவுறவே. 172

சுகஞான மேறிக் கிரியை குறைந்தது சுத்தவித்தை
மிகஞானங் குன்றிக் கிரியைய தேறனு மீசுரங்கே
ளகஞான முங்கிரி யேற்கிற்சா தாக்கிய மக்கிரியை
தகநாட லேசத்தி சிவமா மறிசிவ தத்துவமே. 173

தத்துவ முப்பத்தாறு.

தோற்றுமிச் சைவசித் தாந்தத்தின் றத்துவஞ் சொல்லுவன்கே, ளாத்தும தத்துவ நாலாற தாகு மவற்றினுடன், றேற்றுமிவ் வித்தியா தத்துவ மேழுஞ் சிவதத்துவ, மேற்றதிங் கைந்தோ டிவைமுப்பத் தா றென் றியம்பிடுமே. 174

ஒடுங்குங்கருவி.

பிருதிவி யைந்து சிவதத் துவமைந்து பிர்கிர்தி யைந், தறியுங் கலாதியோ ராறுபத் தாறுவிஞ் ஞான முடன், செறியுந் தசவாயு வைந்து வசனுதி சேர்ந் தொடுக்க, நெறியுற்ற தத்துவ மேழைந்தென் றுரகம நேர்சொனுமே. 175

பேதா யுணர்த்துங் கருவியா றுறின் பிறிவுமதே
பூதா திசிவதத் வாதி கலாதி புருடனைவிட்
டீதொ டிருக்கும் பொறிபுலன் வாயு மனுதியென
வேதானுணர்த்துங்கருவியேழைந்தாய்விதிசொனுமே.

மிக்கநல் வேதத் தலையின் பொதுவொடு மெய்யு ணரத், தக்கவொண் சைவசித் தாந்தப் பொதுவுமென் சங்கையற, வொக்க வுரைத்த வருளுரு வேசைவத்

துற்றவுண்மை, துக்கப் பிறவி யறவுரை கேள்சொல் வன் றாயவனே. 177

சித்தாந்தத்துண்மை.

அணியார்சித் தாந்தப் பொதுவுரைத் துண்மையி ஞத்துமலக், கணமா ரவத்தை யுணர்த்து முறைமை கருதினர்க்குப், பணிஞான வாய்மை தரிசனத் தோடு பணியறுதல், துணையாரு ஞேயத் தழுத்தஞ் செழுத்தணைந் தோர்தன்மையே. 178

ஆன்மலட்சணம்.

வாய்ந்தகன் மத்துக் குடன்மன்னு மைம்புலன் வாசல்பற்றி, யாய்ந்தவை தம்மி லழுந்தியு மொன்றறி யாதறிவிற், றோய்ந்தங் கடையு மவத்தையைந் தான் மலந் துன்னிநின்று, வேய்ந்த வதீதத்தி னுண்மை யுயிர்க்கென வென்றறியே. 179

தேகேந்திரியங்க ளுணருமேயன்றி ஆத்மா வுணருகிறதில்லை யெனில்.

ஊனறி யாதுணர் வானன்றி யொவ்வொர் புலன் களுற்றுத், தானுணர் வாகம ஞதிக டம்மிற் றரும் பயன்க, ளான தருந்தும் பிராணன் சடமொன் றறிவ ரிதா, மூன வினைமெய்யு ளாவிக் கருளுணர் விக்கு மன்றே. 180

தேகேந்திரியங்க ளறியாதாகில் ஆத்மா தானே யறியுமெனில்.

உணர்வெனி லிந்தியம் வேண்டா மதன்றெனி லோர்பயனி,லுணர்வுக்குதவியெனிற்சடமிந்திய முற்ற தெல்லா, முணர்வுற்றங் கீச னுணர்த்துவ னென்னி

லுயிரினுக்கங், குணர்வுறு மீச னசேதனத் திற்குணர்த் தானெனுமே. 181

ஆனு லாத்மாவுக் குணர்வுண்டாகில் வேறுமோருணர்வு கொடுக்க வேண்டுமோ வெனில்.

உணர்வா லுணர்ந்தவை யாவுமசத்ததிங் குண்மை யென்று, முணர்வா லுணர வொண்ணுதா னிலையென் றுணருந்தொன்மை, யுணர்வால் விடயங்க ளொவ் வொன்றொடொன்றி யுகந்துநின்ற, வுணர்வா லசத் தவ் வுணர்வாற் சிவத்தை யுணர்வரிதே. 182

இப்படி சொல்லி லாத்மா வறியு மெனில்.

எந்த வுணர்வசத் தென்ற துயிருண ராதிறைவன்
றந்த வுணர்வு வுணரா தசத்துண ராதுயிரும்
பந்தக் கருவியுற் றோரா தருட்பற் றிடாதுயிர்விட்
டுந்தருட்பாகமொத் தோராதொளிமுன் னுறு திருளே.

ஆனு லறிகிற முறைமை யெப்படி யெனில்.

சத்தி து வென்றங் கசத்தறி யாதந்தச் சத்தசத் தின், றத்திர முற்றிட் டணுகாத சத்திது சத்திதென் றோர், சுத்த வெளியிரு ளல்லா ததுகண் டனமசத் தைச், சத்துடன் கூடி யகற்றுகை யாற்சத சத்து மிதே. 184

ஆன்மா ஒன்றையு முணரமாட்டாது; அருள்கூடினபோதே யுணரும்; ஆனல், அருளுக்கு மாத்மாவுக்கு மோரு கருத்தாமோ வெனில்.

விழிக்கொளி தீபங் கொடுத்தது காட்டிடு மென் னின்முனம், விழிக்கொளி யொன்றில் விளக்கொளி மேவி விளங்கவற்றை, விழிக்கு ளொளியகன்

றேயவை கண்டிடும் வேறறியா, விழிக்கு ளொளிசுடர்
கூடினுந் தன்செயல் வேறெனுமே. 185

இந்த ஆத்மா எவ்விடத்தேநின் றுணருமேனில்.

மன்னுயி ரோதலத் தொன்று விடயங்கண் மற்ற
துரு, தென்னி லுடற்றுன்னு மாகி லவத்தையற் றிந்
திரிய, முன்னிலைந் தொக்க வறிவெழ வேண்டுமுற்
றெவ்விடத்துந், துன்னி வியாத்திக்கிற் போக்கு வரவு
செல்லாதுயிர்க்கே. 186

மிக்கறி வாய்நிற்ப னென்னி லனாதி வினைசனன
மொக்க வுறுனெண் சடல நிகழ்த்திவ் வுடலினுக்கு
ணிற்கும் வசமல்ல வென்ப ரிவைநல நீதியன்று
தக்கதறியிற் பளிங்கொக்கு மாருயிர் சாருமன்றே.187

இப்படிக்கோத்த ஆத்மா அவத்தைப்படுகிற முறைமை
யெப்படியெனில்.

வாக்காதி யைந்து வசனாதி யைந்துநல் வாயுபத்து
போக்கான சோத்திர மாதிக ளைந்து புலனுமைந்து
நீக்காத நான்கு கரணம் புருடனு நெற்றிநடுத்
தாக்காய முப்பதி னைந்து மிருப்பது சாக்கிரமே. 188

வளர்தரு கின்ற வசனாதி யைந்துநல் வாயுபத்து
முளர்தரு நாற்கர ணம்புல னைந்தி னுடம்புருடன்
களந்தனி லிவ்விரு பத்தைந்து நிற்கக் கனவதென்றே
யளந்ததிங் காகம நூலென் றிதனை யறிந்துகொளே.

உற்ற புருடனற் சித்தம் பிராண னுகந்திதய
நிற்றல் சுழுத்தி புருடன் பிராணனின் னுபியிலே
துற்றிங் கிருத்த றுரியநன் மூலத்திற் றொல்புருடன்
றெற்றி யிருத்த லதீதமென் றாகமஞ் செப்பிடுமே.190

மத்தியாலவத்தை.

முன்னே யறிந்து மறியா திருந்த முதலதிதம்
பின்னே யறிவின்றி மூச்சிட் டிருந்த பிழைதுரிய
மன்னே மயங்கியை யுற்றல் சுழுத்தி மனநினைத
றன்னேர் கனவது தானறிந் தொத்தது சாக்கிரமே.

மேலாலவத்தை.

நனவினிற் சுத்தவித் தைஞ்சுறு மித்தினி ஞலதுகேள்
கனவினிற் கூரு மிதிலொரு மூன்றுறல் காண்சுழுத்தி
வினவு மிதிலிரண் டுற்ற றுரிய மிதிலொன்றுதான்
புனையு மதீத மிவையனு பூதி பொதிந்துசொல்லே.

கருவி கழன்றிடஞ் சுத்தவித் தைமனக் காட்சியுறத்
தருவதிங் கீசுரஞ் சித்தங் கழன்றிடஞ் சாதாக்கிய
மருவிய வாயு விழுந்திடஞ் சத்திமன் பூரணத்திற்
பரிவி லழுந்தி யவிழ்ந்தவிழ்ந் தற்றிடம் பார்சிவமே.

கேவலசகல சுத்தாவத்தை.

மாசறு கின்ற வதீதத்தி னிற்றன்மன் கேவலமா
மாசறு கின்ற கலாதியி னிற்ற லதுசகலந்
தேசுறு கின்ற நனவி லதீதஞ் செறியினுயி
ரேசறுகின்ற பிறப்பொழிக்குஞ்சுத்தமெய்தினர்க்கே.

அனுபூதி தன்னின் மயக்க மடுக்கிலக் கேவலமா, மனுபூதி தன்னில் விகற்ப மடுக்கி லதுசகல, மனுபூதி தன்னின் மயக்க விகற்ப மடாமைசுத்த, மனுபூதி யிற்கீழ் மணிபோலத் தாக்கற் றவர்க்கொப்பரே. 195

இனி யுணர்த்துமுறைமை யேப்படியேனில்.

அறியு மிடத்திந் திரியத்தி லொன்றைந்து பூத்த தொன்று, செறியுங் காணங்க ளுன்கேழ் கலாதி சிவ

தத்வமைந், துறுமிக்கருவிகள் கூடியொருபுல னின்னுக ரும், பிறியி லுயிருண ராதவை தாமுண ரார்பிணமே.

ஆனலாத்மா தத்துவங்களையறிந்து கூடிற்றே, தத்துவங்க ளாத்மாவை யறிந்து கூடிற்றேவெனில்.

அறிவு தனக்கிலை யாத்மாப் பொறிக ளறிந்தடையா, வறிவு தனக்கதி லாப்பொறி யாவியொ டாதரியா, வறிவு தனக்கொன் றிலாத்தத் துவவன்ன மாஞ்சொருப, மறிவு தனக்குச் சுடரான ஞானமுன் னும்பொசிப்பே. 197

ஆனலாத்மா இந்திரியங்களைக்கொண் டறிவதுபோலப் பரமஞானத்தைக்கொண் டறியுமேனில்.

பொறியைப் பொறிபுல னூலே யறிவது போலறிவான், பிறிவரு ஞானங்கொண் டாருயிர் காணப்பெறின்முதலாஞ், செறிவுறு ஞான முயிர்க்கா யறியுமெனிற்சிலர்க்கங், குறுபசி தீர வொருவ னருந்திடலொத்திடுமே. 198

ஆனலாத்மா வறிந்து போசிக்கிற முறைமை யெப்படியோ வெனில்.

சாருமிருளி னினைந்தவை யாதித்தன் சந்நிதிக்கே, யாருந் தொழில்செய் தவர்போல வாருயி ராகுமலஞ், சேர வொழித்து மகிழ்ந்து மருளின் செய்யலென்றிங்ஙன், கூர வறிவொன் றிலாவுயிர்க் கென்னென்று கூறுவதே. 199

இன்னுமொரு திருஷ்டாந்தத்தினல் விளங்கக்கூறல்.

உணரு மனதி பொறிபுல னுத்மா வுணர்த்தவென்று முணரும் பழைமை யறியாது போல வுயிர்க்குருடா

னுணர வுணர்த்திட வுற்று மறிவொன் றிலாவுயிருக்
குணரமுற் செய்கன்ம மூட்டி யுறக்கு முயர்பதியே.

மேலிப்படி யுணர்த்தின ஞானத்தி னுண்மைகூறல்.

தத்துவங் காட்டுகைக் கில்லே யெனினுயிர் தானறி யாத், தத்துவத் தானுயிர் ஞானத்தைச் சாருந் தகை மையிலே, யொத்துயிர் முன்செய் தவத்தா லிறையரு ளூற்றுணர்வாம், வித்தகன் றத்துவ நீக்கி யளிப்பன் விரைகழலே. 201

பலநிறஞ் சேருந்தொன் மைப்படி கத்தொளி பற் றுவன, தலமுங் கதிரொளி கூட்டுகை போலுயிர் தத் துவஞ்சேர்ந், தலமற வண்ண லருள்கூட்டு மண்ணற் கவையனுகா, நலமுறு பூரண ஞானமுன் ஞான நவி லுவரே. 202

மலமேவு மாயையு மாமாயை யும்முயிர் மன்னிநின் றங், கலமே வுயிர்வினை யார்பொழு தென்றங் கருளிரு ளாஞ், சலமேவு மாயையை மாமாயை யைவினை தான் றெரியில், நலமே வுயிர்க்கிருள் போய்ப்பிர காசிக்கு நல்லருளே. 203

இப்படிக்கோத்த ஞானத்தைத் தரிசிக்கு முறைமை யெப்படியெனில்.

எண்ணிய வாத்ம தரிசன சுத்தி யிலாபமுங்கேள்
திண்ணிய பாச மொழித்துயிர் ஞானந் தெரிசித்திடி
னண்ணிய விச்சா ஞானங் கிரியை நழுவல்சுத்தி
புண்ணியன் றன்னுரு ஞேயத் தழுந்தல் புரோசனமே.

ஆத்மா தன்னையன்றி வேறென்றை
யறியமாட்டா தேனல்.

ஆத்மா வறிவொன் றறியா தெனினு மரனருளா
லாத்மாப் பகுத்த தருந்தியுந் தன்னறி வாமென்றுறு
மாத்மா வறிவத னுலவ் வருளை யறிந்திடவே
யாத்மாவுந் தன்னை யறிந்திடுந் தானது வாகிநின்றே.

ஆனலாத்மா ஞானமாயே நின்றுந் றன்னையறிவதொழிய
வேறெரு பிரயோசன மில்லையோவெனில்.

உன்னுநற் றத்துவ மான துணர்ந்தங் குணர்ந்தவற்றிற்
றன்னைச் செலுத்தித் தனையறி யிற்றன் மயமதனை
மன்னுமித் தத்துவ நீக்கிட ஞான மயமதுவாய்த்
துன்னு மதுசுத்த ஞானத்து ஞேயமுந் தோன்றிடுமே.

மேற் கடாவும் விடயம்.

உற்ற வுணர்வன்றி வேறொரு ஞேயமுண் டென்ப தென்கே, ளத்த னருளென் பதுகாண்மெய்ஞ் ஞானம தெங்ஙனென்னிற், சுத்தப்ர காசங் கதிரோனை யன்றிச் சொல் லாரதுபோ, னித்தன்றன் ஞேய மவன்பிர காச நிகழ்சத்தியே. 207

அந்தச்சத்திதானெப்படி யிருக்குமெனில்.

சோன்னசிற் சத்திப்ர காசஞ்சிவத்தினிற் றென்று மென்றுன், மன்னுஞ் சிவமன்றிச் சத்திய தேமலம் வாட்டியத்தன், றன்னை யருளுவ தென்போ லொளி யிருட் டானகற்றி, யுன்னுங் கதிர்தனைக் காட்டுதல் போலரு ளோர்விக்குமே. 208

இப்படி ஞானத்தைத் தரிசித்தவர்கள் மேற்பணியறு
முறைமை யெப்படியெனில்.

பெத்தரைப் பேய்மன்னப் பேய்வச மாவர்பெம் மானருளு, முத்தரை மேவச் சிவன்வச மாவ ரெனின் முதலா, மத்த னறிவெழுந் தைந்தொழி லாற்றி யவர் நடத்த, வொத்தெழ வேண்டுமென் ருயிது நன்றென் றுகந்தறியே. 209

ஆனலஃதெப்படி யெனில்.

முற்றுமுன் கூனிங் கந்தக னுமன் முடவனைத் தான், பற்றினு மவ்வுறுப் புண்டாவ தில்லையென் பன் னுமுயிர்க், குற்றமெய்ஞ் ஞான முறினு நடத்துவ முன்முறைமை, சிற்பர னைந்தொழிற் செய்திடுங் காணருட் டேயங்கொண்டே. 210

அருளினுண்மையும் பணியறு முறைமையும்
அருளிச் செய்தல்.

இந்த நிலையுயிர் மன்னக் கலாதி யெழுமறிவின்
முந்த வருந்து மலநீத்த வந்நிலை முன்றத்துவ
மந்த நிலையுயி ராகா நிலையுள் ளறிவடங்கி
வந்திவ்வியாபகவான்பொருட் டோன்றுமிவ்வாறறியே.

மேற்பணியற்றபோதே சிவன்றேன்று முறைமைக்குப்
பிரமாணங் கூறல்.

சேறிந்து சிவமாய் விடுவதன் றிச்சில தோன்று மென்றிங், கறைந்த தெனேவுட லாதி யொழித்துனை யாய்கைக்கினஞ், சிறந்து தொடரவிஞ் ஞானத்தி னுற் சிவந் தேறலலா, துறைந்தரன் பாத முறஞானந் தோற் றிய தொன்றறிதே. 212

இனிப்பணிய முத்தவர்கள் நேயத்தழுந்து முறைமை
யெப்படியெனில்.

ஆறுறு தத்துவந் தான்புண ராம லறிவழிக்க
வீரா மதீத மதின்மயங் காமல் விளங்குமருட்
பேறு லுனதிச்சை ஞானங் கிரியைதன் பின்னமதற்
றீருஞ் சிவமது வாய்நிற்றல் சாக்கிரா தீதமிதே. 213

இவற்றை ஞானத்தாலே யொழிக்கவேண்டுமோ,
அவை தாமே யொழியாவோ வெனில்.

அடங்கக் கரண மறியா தடங்க வறிந்தடக்க
வடங்கு மெனிலுன திச்சை பொதித்தடங் காக்கரண
மடங்கி யடங்கு மெனிலுள் ளறிவற்று மன்னியமா
யடங்குதல் விட்டரு ளாலன்றி யுண்மை யறிவரிதே.

பாசஞானம் போனலன்றிச் சிவனை யறியவொண்ணு
தென் றறிவித்து மேற் பாசஞானத்தினுங்
கூடாமல்நிற்த முறைமை கூறல்.

தத்துவ மாறுறுடனே பொசிப்புக டானருந்த,
லொத்துப் பகுத்த வறிவி லருணின் றுணர்த்துமென்
றோர், தத்துவ மிந்தப் பகல்விளக் காமருட் டாஞென்
றவே, துய்த்திடு நற்சிவந் தன்னுடன் மேவத் துவக்
கறுமே. 215

இனிப்பாச ஞானமும் பசுஞானமுங்கூடாம லந்த
வுண்மையிலே நிற்த முறைமை கூறில்.

முன்செய் தவத்தினி லாசான்சொற் கேட்டம்
மொழிகள்சிந்தித், தஞ்சலி செய்தங் கருத்தமுற் றோ
ர்ந்துண ரும்முயிருந், தஞ்சமுற் றுவி யரனோ டுறநிட்
டை சாருமுத, மின்செய லாலடைந் தோர்க டமக்
கிங் கிதுமுத்தியே. 216

### முன்சொன்ன முறைமையைச் சேர்த்து ஒரு செய்யுளிற் கூறல்.

பன்னுமிப் பாச வறிவாற் பசுவறி வாலுமான், றன்னையறியவொண் ணாதாகு ஞானத்தின் சார்வொளி யின், முன்னை யுறுஞ்சிற் றறிவொழித் தேமுனை ஞான மதாய், மன்னுமன் பாலுயர் கின்ற சிவத்தொன்றன் மாநிட்டையே. 217

### இனியிந்த நிட்டையிலேநிற்க வரிதானவர்களுக்கு வேறுமோ ருபாயங் கூறல்.

ஒத்துமுன் சொன்னிட்டை தானரி தேன்முன் னுரைத்ததுவு, மத்தி னளவை யறிந்தவற் றுண்மை யவையித்தினு, லுற்றுயிர் சீவித் துறுந்தனை யும்மரு ளூட்டுஞ்செவ்வே, முற்று மயக்க மறவரு ளாலுண்க முன்னுணவே. 218

### முன்னுரைத்த வனுபோகவகை யருளிச்செய்தல்.

இருந்த சடத்தைத் தகித்தே மனங்கொண் டுசா வியிட்டுத், தெரிந்த மனத்தைத் தெளிவுறச் செய்து சிவபாமத், திருந்திறங் காதெங்குந் தானாய் நிறைந்தங் கிமைப்பில்வந்த, மருந்தமு தந்தனை யுண்போர் மவுன மாபிதுவே. 219

### ஆனாற் சிவனை யாத்மா தான்கருதிக் கூடுவதா யிருந்ததேனில்.

தியானித் திடிமனம் வேண்டும் பயனிலை சேர்ம னம்போய்த், தியானிப்ப னென்னின் மறைக்கு மிரு ளித் தியானத்தினுற், றியானிக்கொ ணாது தியானிக்க வென்னிற் செயனினதாந், தியானிக்க வேண்டுவ தில் லைச் சிவனருட் சேர்ந்தவர்க்கே. 220

இப்படி சொல்லப்பட்ட ஆத்மாவுஞ் சிவமும் பேதமோ, அபேதமோ, பேதாபேதமோ வெனில்.

இறையுயி ராய்ப்பிறிந் தொன்றி லொருதன்மை யாயிரண்டாய்ப், பிறிவது கூடி விறுமொன்றெுன் ருதெனிற் பின்னமுத்தி, கறைவா னனலு ளிரும்பா யுயிரொன்றி லேங்தொழினீ, செறியு நிலையன் றிறை கூட ருன்மலஞ் சேர்க்கையொப்பே. 221

இந்தவாத்மா சிவத்துடனே கூடும்போது ஆணவமல மழியுமோ வெனில்.

இறக்குமிப் பாச மெனினித்த மன்றிற வாத தெனி, னிறக்குமெய்ஞ் ஞான முருர்கா ரியமிறந் தே நித்தமா, யுறத்தருங் காரணந் தீமுன் னுருதொழி யாவிருள்போய்ச், சிறப்புடை முத்தியிற் சோதிப் பாசஞ் சிதைவில்லையே. 222

நின்ற மாயையின் காரியமுங் கன்மத்தின் காரியமுமேன் செய்யுமெனில்.

அளவிற் பிறவி தருஞ்சஞ் சிதமங்கி யாரும்விதத்
துளவுப தேசத் தொழிந்து பிராத்த முடல்பொசித்து
வினைவுறு மாமெனி லாகா மியமும் விடாமல்வருங்
கிளர்வென் னிருளொளி சேர்போல ஞானங் கியிற்
[கெடுமே. 223

இன்னும் பிராரத்தகன்மம் வாதியாதபடிக்கும் ஆகாமிய கன்மம் பேதியாதபடிக்கும் பஞ்சாக்கரத்தா லோருபாயங்கூறல்.

பெந்த மறுத்துப் பௌதிக முற்றுழல் பேதமிங்ஙன்
கந்த முறுங்கடம் போல்வினை சார்ந்திடுங் காணிங்கடி
யந்தமி லாவஞ் செழுத்தத னூற் றடவுச்சரி
யிந்தப் பிராரத்த வாதையின் ருகா மியமில்லையே. 224

தோன்றின் முறைமையை யறியுமுபாய
மெப்படியெனில்.

அஞ்செழுத் தாலித் திரோத மலமு னருள்சிவஷ்சூழ், தஞ்ச முறும னடுநின்று தோன்றிடுந் தன்மைத்தொன்மை, விஞ்ச வருமனத் தாலந்த வாசியின் மேவவுறத், துஞ்சிப் பிறக்குந் துகண்மாற நீயுச் சரிதுணிந்தே. 225

இந்தத் திருமந்திரத்தை யுச்சரிக்கு முபாய
மெப்படி யெனில்.

தீதிற் றிரோத மலமிவை நீங்கச் சிவன்முன்னுற
வோதத் திரோத மலத்தை யறுத்தரு ளோங்கிடும்பின்
கோதற்ற வாசி யருளு மயக்கறக் கூடும்பற்றற்
றேதப் படாம விறையொடொன் றுக்கு மெழுத்தஞ்சு
[மே. 226

அணைந்தோர்தன்மை.

சடமே லெடார்சஞ்சி தாதிகண் மூவிதத் தாலொழித்தே, யடாரம லாத்ம தரிசனத் தாலந்த ஞேயத்தருட், டொடரா லொடுங்குயிர்க் கின்ப மொடுங்கிடத் தூங்குஞ்செவ்வே, தடையறத் தாங்குந் திரோதம தற்றதபோதனரே. 227

இந்த வுண்மையிலே நிற்கத் தக்கவர்கள் முன்புள்ள
நியமங்க ளெல்லாம் விட்டு நிற்பார்களோ விடாமல்
நிற்பார்களோ வெனில்.

குறிகுணங் காலந்திக் காசனங் கொள்கை குலநெறிசீர், செறிவிர தந்தவஞ் சிலந் தியானஞ் செபமுமறுத், தறவுமொ ழித்தற்செய் கைபொருந் தார்களடையுஞ்செய்தி, யுறுதுயில் வோர்கைப் பொருள்ஒபா லொழிந்தொழி யாதுற்றதே. 228

குலங்குணங் காலந்திக் காசனங் கொள்கை குறி நெறிசீர், நலந்தருஞ் சீலந் தவஞ்செபந் த்யானநண் ஞமனண்ணித், தலந்தனில் வாழ்பவர் போலே துயில் பவர் தங்கள்கையிற், புலன்கொள் பதார்த்த மெனவா ய்மை நின்றிடப் போமற்றதே. 229

இந்தப் பொருளை யுள்ளே கண்டிருப்பார்களோ
புறம்பே கண்டிருப்பார்களோவெனில்,
இவையிரண்டு மாகாவெனல்.

அந்தரி யாக வெகுர்யாக பூசைக ளாமுலகி, லிந்த விரண்டு மறியாரஞ் ஞானமெல் லாநிகழ, வந்து மகிழ்ந் தென்றும் வாழ்பவர் போன்மன்னு ஞானமதா, நந்துட் புறம்பிலைச் சாயுச்சி யம்பெற்ற நன்மையர்க்கே. 230

இந்தநிலை வந்தாலும் வேறுமோ ருபாயநிலை கூறல்.

மண்முத ஞன்குமவ் வானுற வானக வண்மை யைப்போ, லெண்ணு மெவற்றுளு ஞான நிரம்பி யிருக் குமிந்தக், கண்ணினிற் கண்ட விடயத்தை யக்கண்ணிற் காணவருள், புண்ணிய நாதன் றிருமேனி யாலயம் போய்ப்புகுமே. 231

இந்த நிலையினிற்க அரிதானவர்களுக்கு வேறுமோ
ருபாயங் கூறல்.

ஊட்டி யுறக்கு முயிராளி யைச்சிவ யோகத்திஞ
ஞட்டம் பெறும்படி ஞானநற் பூசையை நண்ணிடவே
கூட்டு மினிப்பஞ்ச சுத்திசெய்பூசையுங் கூர்வைசிவன்
றேட்டறக் கூடு மெனிற்பஞ்ச சுத்தியுஞ் செப்பெனக்
[கே. 232

### பூதசுத்தி, ஆத்மசுத்தி, திரவியசுத்தி.

சேறியும் பிருதிவி முன்முப்பத் தாறுஞ் செடம
தென்றே, குறிதத் துவசுத்தி யேபூத சுத்தி குறித்திட
க்கே, ளறிவலை யாத விடமாத்ம சுத்திமுன் னும்விட
யங், தொறுநய னத்தி லொழித்த றிரவிய சுத்தியதே.

### மந்திர சுத்தி.

நகாரந் திரோத மகார மலமிவை நாட்டமறச்,
சிகார மெனுஞ்சிவன் றன்னுடன் சேர்க்கச் செறிந்தரு
ளாம், வகாரம் யகார முயிர்சிவ மெய்த வரவழைத்து,
விகாரங் கெடுக்குமிம் மந்திர சுத்திபண்மிக்கவனே.234

### இலிங்கசுத்தி.

பெற்றநற் பஞ்சாக் கரவழி யாற்சென்று பேதமற
வுற்ற வகண்ட பரிபூ ரணசிவ முள்ளடக்கிச்
செற்று விகார மறவுட் புறம்பற வேசிவத்திற்
றுற்றெழுந்தானந்தந் தானே சிவலிங்க சுத்தியதே.235

### இந்தநிலை தெரிந்தாலும் பரத்திற்கூட வேறுமோ ருபாயமாக ஞானத்திற் சரியைகூறல்.

திருவேடத் தோரையும் வானோர் தொழுஞ்சிவ
லிங்கத்தையு, மரியோ டயனுக் கரிதாஞ் சிவமென் றடி
வணங்கி, வரிவேல் விழிதர ளங்கள் சொரிந்திட வாய்
குழறப், பரிவோடு கண்டவர் ஞான முதத்தைப் பரு
குவரே. 236

உலகா யதாதி சிவாத்விதி யீறென் றுரைப்பதனு
ணிலவாதவரவர் கொண்டாடு நேர்மை நெறிக்கரிதாய்த்
தொலையாதவேதத் தலைப்பொரு ளாகிச்சுகோ ததியாய்
மலையா வுரையத னுற்பெற்றமுத்தியில் வாய்ப்பதுவே.

### வேதாந்தம்.

ஆற்றிடுஞ் சைவசித் தாந்தத்தி னுண்மை யடிய
னுக்குத், தோற்ற வுரைத்தனே வேதாந்தத் துண்மை
யிற் சொற்பொருளே, மாற்ற மறவுரை கோவேயின்
றென்றன் மயலறவே, தேற்றம் பெறுகைக்கு வேதாந்
தங் கூறுவன் றேர்ந்துகொள்ளே. 238

ஆத்தும வாக்கியங் காரிய கார்ண மசுத்தசுத்த
மேற்ற பதங்கள் பதார்த்தமிம் முக்கிய லக்கியத்திற்
றேற்று மவத்தை யபிமானி லக்கணை தன்னுமிவை
சாற்றுவன் கேண்மெய்ச் சவணத்தி னுலிவை தம்மை
[யின்றே. 239

### மகாவாக்கியம்.

மயக்க முறுமெச் சமயிக டாமு மயங்குகின்ற
தியக்க மறத்தந்த மாவாக் கியமிங்ஙன் றீர்ந்தறிந்தா
லுயிர்க்கும் பரசிவன் றங்கட் கயிக்கிய முற்றிடவே
பயக்குநற் றத்தொ மசியெனும் வாக்கியம் பற்றினர்க்
[கே. 240

நிறைந்தே யிருந்த பரனே யதுவென நேர்ந்தபொருள்
செறிந்தே யிருக்கின்ற சீவனே நீயென்று தேரும்பொரு
ளறிந்தே யிரண்டி னயிக்கிய மான வரும்பொருடான்
பிறிந்தே யிராம லதுநீயிங் கானநற் பெற்றியதே. 241

### அன்வயவாக்கியம்.

அறியாத காரியோ பாதியைச் சீவ னடைந்துநின்று
செறிவான வாதனே நீக்க முதல்வனுஞ் சிற்சொருபம்
பிறியாமற் காட்டிய தத்தொ மசியைப் பிறித்திங்ஙனே
நெறியானதொந்தத் தசிவாக் கியத்தை நிறுத்தினனே.

நெறியிங் குறமறை தொம்பதந் தற்பத நீங்கலறச்
செறியுஞ்சிவபதஞ் சேர்ந்திடும்வாக்கியஞ் சேரும்வகை
யறியுமக் காரிய காரண நீங்கு மதுசிவத்தைக்
குறியுற நானின் றுணர்த்துவன் கோதறக் கூடிநின்றே.

### ஸ்தூல சிரவணுதி.

ஆய்ந்த சவணுதி தன்னி லிருவகை யாகுமதிற்
றோய்ந்தநற் றாலநற் சூக்கும மென்றுறுந் தூலமிதில்
வாய்ந்த பலகலை யோதல் சவண மதித்தபொருள்
வேய்ந்த மனனநி தித்யா சனநிற்றன் மேவிடுமே.

### சூக்தும சிரவணுதி.

நேர்ந்த சவணமா வாக்கியங் கேட்ட னிலைமைமன்ன
லார்ந்த வுயிர்பரற் கானவு பாதி யறச்சிறப்பான்
றேர்ந்துறு வார்நிதித் யாசனஞ் சற்குரு தீரவருள்
சார்ந்தனு பூதியி லுற்றே நிசியறச் சார்வரன்றே. 245

### காரியோபாதி.

உன்னை மறைத்திடுங் காரிய மென்னு முபாதியதிங்
கென்னெனிற் றேயம்பி ராணம தொத்திடு மிந்திரிய
மன்னு மனம்புத்தி யாங்காரஞ் சித்தம் வளர்பெறவே
துன்னுமிவ் வேழென மாமறை சொல்லுந் தொகைய
[றியே. 246

### துவம்பத வவத்தை யபிமானி.

சேர்ந்த கருவி கரணமொ டேநின்ற சீர்நனவிற்
போந்திடும் வாதனை கொண்டு கரணம் புரிதல்கனு
தேர்ந்திடும் வாதனை மாளல் சுழுத்தி திறமதொடே
சார்ந்தநல் விஸ்வன்மெய் தைசதன் ப்ராஞ்ஞன்றன்
[சார்பறியே. 247

### துவம்பத சுத்தா சுத்தம்.

பன்னிய காரிய மேழி லுடலம் பகுத்துநின்று, துன்னி யிருந்ததை யானென்று சொல்லுதற் றொம்ப தத்தின், றன்னியல் பானவ சுத்த முடன்முதற் றனல வென், றுன்னி யிருந்த தனையறிந் தாற்சுத்த முற் றறியே. 248

### துவம்பத முக்கிய விலக்கியம்.

பிறிவறி யாமலித் தேகத்தை நானென்ற பின்ன மொடே, செறிவுறு கின்றது தொம்பத முக்கியந் தேர்சபள, நெறியுற நீக்கித் தனைக்காட் டிடக்கண்டு நின்றதுதா, னறியு மிலக்கிய மென்னு மருமறை யாய்ந்துகொள் ளே. 249

### காரணவுபாதி.

உற்றசர் வஞ்ஞத்வஞ் சர்வே சுரமு முகந்துநின்று
கற்றசர் வாந்தரி யாமியுஞ் சர்வகார ணத்வமும்
பற்றருஞ் சர்வ கிருட்டித் துவஞ்சர்வ பாலியத்தோ
டுற்றிடு சர்வசங் காரமிக் காரணோ பாதியதே. 250

### தற்பத வவத்தை யபிமானி.

மன்னுநற் சான்றது சாக்கிரந் தோன்றன் மழுங் குதருன், றுன்னிய சொப்பனந் தோன்ற லசைவற றெல்சுழுத்தி, யுன்னும் விராட்டிங் கிரணிய கர்ப்ப னுகந்துமறை, பன்னுநல் லவ்யா கிருதந் தமையும் பரிந் தறியே. 251

### தற்பத சுத்தா சுத்தம்.

செப்பிய காரண மேழையு நானென்று சேர்ந்ததனோ
டொப்பற நின்றது தற்பதந் தன்னி லுறுமசுத்தங்

கப்பற வேழுங் கடந்தீசன் றன்னையுங் கண்டதுதான்
றப்பற வேபர சுத்தமென் றேமறை சாற்றியதே. 252

தற்பத முக்கிய விலக்கியம்.

பிறிந்திடுங் காரணோபாதியை நானென்றுபேதமுற்றே
நிறைந்திடுந் தற்பதந் தன்னிலிம் முக்கிய நேர்சபள
மறிந்திடு மொன்றிதை நீக்கிப் பரனை யலைவறவே
செறிந்திடக் காட்டக்கண் டுற்ற திலக்கியஞ் சேர்ந்தறி
[யே. 253

அசிபத வபிமானி.

நிறைந்த பரனென நின்றது சாக்கிர நீள்விசுவ
முறைந்தது நற்கன வுற்ற விரண்டி னுவலையற
விறந்த சுழுத்தி யிவற்றபி மானியு மிங்கியம்பிற்
சிறந்த சொலிதைப்ர சாபதி சாந்தனைச் சேர்ந்தறியே.

இலக்கணை.

புரிந்த சகர்லக் கணைவிட்ட தேயென்று போற்
றுமறை, பரிந்த சகர்லக் கணையே விடாத பரிசதொ
ன்ற, விரிந்த சகர்லக் கணையது விட்டு விடாததுநீ,
திருந்தும் படியினந் தீர வுரைப்பன் சிறந்திடவே. 255

விட்ட விலக்கணை.

நாடிலிம் மஞ்சது கூப்பிடு மென்ற நலமுங்கங்கை
யூடிய கோஷ மதுபோ லுடம்புற் றுரைக்குமென்றுய்
கூடிய லக்கணை விட்டது மஞ்சாக் குரோசந்தியுற்
றூடிய கங்காயாங் கோஷப் பிரதி வசதியன்றே.

விடாத விலக்கணை.

உன்னி நிறத்தை விடாத சிவப்புமுற் றூடியது
தன்னை விடாதுறு வெள்ளையும் போலத் தகுசிவப்பாற்

சென்னிவி டாத விலக்கணை யேசோணந் திட்டதிசேர்
மன்னுமச் சுவேதோ தாவதி தானதின் வாக்கியமே.

விட்டுவிடாத விலக்கணை.

அத்தேசந் தன்னிலக் காலத்திற் கண்ட வவனிவன்று
னித்தார மென்றுற்ற நேர்போலச் சிவன் பரனிலையை
யெத்தாலும் வேறற விட்டுவி டாத விலக்கணைதேர்ந்
தொத்தேசோ யந்தேவ தத்தனென் றேமறை யோதி
[டுமே. 258

ஆய்ந்தவே தாந்தத் தரும்பொரு டன்னை யடிய
னுக்கு, வாய்ந்த சவண மனன மனத்தில் வளம்பெ
றவே, யேய்ந்தின் றிசைவித் ததுபோ லெனக்கிங்
கிசைந்தபொருட், டோய்ந்திட வேநிதித் யாசனத் தா
னுரை தூயவனே. 259

பொறிபுலன் றப்பி லறியும் பொருளல்ல போத
சத்தி, னெறியுறு கின்ற நிதித்யா சனத்தை நினக்கு
ரைக்கக், குறியெங்ங னேகலைக் கெட்டாத வான்பொ
ருள் கூறுகைக்குச், செறியு மனுபவத் தாலன்றி யார்க்
குந் தெரிவரிதே. 260

சாம்பிரதாய லட்சணம்.

ஏற்ற விடத்தினிற் பூங்கோயில் கட்டி யிருந்தடியா
ராற்ற பரமனை யாடி யருளுவித் தானதுகிற்
சேர்த்து நறுமலர் சாந்த மணிந்து செழும்புழுகு
வார்த்தங் கடியவ ரெல்லாரும் போற்ற மகிழ்ந்துநின்
[றே. 261

திருந்திய மூவருந் தேவருந் தேர்ந்து தெளிவரிதா,
மரும்பொரு டன்னை யடியேற் கருள வவனியின்மேற்,

பொருந்தியென் போல்வந்த புண்ணிய நாதன்றன் பொன்னடியில், வருந்தி யடியற்ற மாமரம் போல வணங்கினனே. 262

### உதகங் கொடுத்தல்.

அடியற்று வீழ்ந்தவன் றன்னை யெடுத்தடி யார்பரமன், படியற்ற பாதோ தகத்தைத் தெளித்துப் பழுதறவே, கொடிசுற்றுங் காயம் பொருளாவி சேரக் கொடுத்திடென, வடிவற்ற வன்கையில் வார்த்தா னுதக மகிழ்ந்துநின்றே. 263

### திருவடிப் பேறு.

அன்னிய மின்றி யடியார்க் கருளு மருளுருவன், றன்னிரு செங்கரஞ் சென்னியில் வைத்திரு தாடலையின், மன்னிய பின்பது கண்ணினு மார்பினும் வைத்திதயந், துன்னவப் பாதந் தனைமோந்திங் காவியுஞ் சோர்ந்தனனே. 264

### பிரசாதமிட் டருளல்.

சேர்ந்தெனை யாளும் பதகுரு சீர்பெறச் சேடமிட்டே, யார்ந்த கவச மெனநீ றளித்தருட் கண்ணதனாற், சார்ந்து வருந்துன்ப மாயையெல் லாந்தலை சாய்ந்திடவே, தீர்ந்தபின் சத்திய ஞானனந் தத்தினைத் தேரெனுமே. 265

### ஊனுயிர்வேறுசெய்தல்.

சேறிந்திடுந் தத்துவந் தொண்ணூற்றெ டாறின் சிறப்படியே, யறிந்தன னின்னரு ளாலேயித் தத்துவ மானவைகள், பிறிந்திடு மோவவை யானோ வெனுமது

பேதையன்றான், சிறந்திட வேயுரை செய்பவனே யெ
னிற் செப்புவனே. 266

வகுத்தநல் வானமு மாருத மங்கியு மப்புமண்ணு
யப், பகுத்ததிங் கைந்திற்கு மெட்டெட்ட தாய்ச்சொ
ல்லும் பல்குணங்க, டொகுத்திங் கறிந்தொரு வன்
சொல்வ தன்றித்தொல் பூதமொன்று, மிகுத்த சடமி
தற் கென்று மறிவின்மை மேவிடுமே. 267

திருந்துஞ் செவிகேட்ப தில்லை யுடம்பு திமிர்த்த
தென்றாய், பொருந்திய கண்டெரி யாதென்பை நாச்
சுவை போற்றறியா, வருந்துங் குமிழு மணந்தெரியா
தென்பை மன்னுமைந்து, விருந்த புருட னிவையறி
வானெனன் றிசைந்தறியே. 268

சத்த பரிச முருவ மிரதங் தயங்குகந்த, மொத்த
வை யைந்தும் புலனென்றறிந்தனை யுன்னையின்றிங்,கித்
திற நம்மை யறிவா னிவனெனன் றிசைந்தறியாக், குத்
திர மாகுமென் றேகோல மாமறை கூப்பிடுமே. 269

வார்த்தையை வாய்சொலப் பாத நடக்க வழங்கி
டக்கை, சேர்த்த மலமிங்க பானன் விடச்சிறு நீர்மை
துன,மார்த்த வுபத்தமொ டைந்தும் வசமெனக் கல்ல
வென்பை,. கோர்த்த புருட னடத்துவன் காணுங்
குறித்தறியே. 270

நினைக்குமனநினை வாகா தெனும்புத்தி நிச்சயிக்கத்,
தனக்கறி வில்லெனு மோங்குமாங் காரந் தளர்ந்த
தெனுங், கனக்கின்ற சித்தமுஞ் சிந்திக்கு மென்னிற்
கலங்குதலா, லினைத்தையு மூட்டி யுறக்கும் புருடனை
யாய்ந்துகொள்ளே. 271

சேர்ந்த பிராணன் முதற்பத்து மேலென்று செப்புவரே, சார்ந்த புருட னுடல்காவல் விட்டுச் சயனம்புக்கிற், சேர்ந்திது நாசியிற் பாம்போடிற் றென்றிலர் சேர்ந்தவுடல், போந்த தமர்சுட் டிடாமலிக் காவல் புரிந்ததன்றே. 272

மண்டல முக்குண மாதார நாடி மலமவத்தை
யுண்டென வேமுன மோதிய தத்துவ முள்ளவெல்லாங்
கண்டுநின் காட்சியி னாலே கருதப் படுவவல்லால்
விண்ட வவற்றிற் கறிவிலை யென்னுமவ் வேதங்களே.

பொருந்து முடன்முதற் பூதங் கருவிகள் பூண்டவெல்லா, மிருந்திங் கெனையல வென்றறி வித்தவென் வாழ்முதலே, திருந்த வெனையின் றறிவித் திடாயருட் டேசிகனே, பரிந்துன் மலரடி நீங்காம நின்று பணிந்திடவே. 274

உயிருண்மைதரிசனம்.

மன்னிய மைந்தனை வாவென் றழைத்திங்ஙன் வைத்தநிலை, யுன்னனு பூதியி லுற்ற துரையென வோங்குமவன், தன்னனு பூதியிற் சார்ந்த பொருளைச் சதுர்பெறவே, யென்னுடை நாயக னேயடி யேனு மியம்புவனே. 275

அனுபூதியுணர்த்தல்.

பொறிபுல னந்தக் கரணங் கருவிகள் பூண்டதொடே, செறியுறச் சென்று கலந்து கழித்த திறமதனை, நெறியுடன் சாக்கிர மானதிவ் வாறென நீயுரைத்த, குறியதிங் கொக்கு மினிமீண் டிருந்துசொல் கோதறவே. 276

## சொப்பனம்.

விரிந்த பொறிபுலன் மேவிய வாதனை மீண்டி டத்தி, லிருந்த மனம்புத்தி யாங்காரஞ் சித்த மிவை யிங்குளே, புரிந்திங் கிருந்தது காணு மிதுவெங்கள் புண்ணியனே, திருந்த விதனைக் கனவென் றறிந்து கொள் சீர்பெறவே. 277

## சுழுத்தி.

சூற்றமெனுமன மாகும் விகற்பங் குலைந்திடவே, யுற்ற நிலைமையி லொன்றி யிருந்துசொல் லொண்மு தலே, செற்றி யிருந்த மனுதிகண் மாண்டு செறிந்திரு ளாற், றுற்றதெவ் வாறென யானெங் ஙனேயிது சொல் லுவனே. 278

கனவி னனவில் வருபேத மான கதித்தவிரு, ளனவிங் குரைத்தனை மூலப் பகுதி யிதுபவத்தி, லுனையிங்குத் தள்ள வுகந்தவித் தென்றறி யொண் மறைநூல், தனி லு முரைத்த திதுகாணு நீயிதன் சார் பறியே. 279

கண்டவிம் மூலப் பகுதி யொழித்தெனைக் காட்டி யிடா, யண்டருந் தேட வறியாத பாத மளித்தவனே, கொண்டவிம் மேனியு மென்பொருட் டென்று குறித் தறிந்தே, னெண்டிசை யோர்க்கு மெழிலாகி நின்ற விறையவனே. 280

நிறைந்திங் கிருளெனச் சொல்லுவ தேதென நீய தனைச், சிறந்தறிந் துண்டிலை யென்றது செப்பிடு தேசி கனே, யுறைந்தவிம் மூலப் பகுதி யறிந்தது முற்றறியி, லறந்திகழ்வான முதலேயஃ துண்டுண் டதிசயமே. 281

### துரியதரிசனம்.

சாற்றிய மூலப் பகுதி யறிந்தது தான துண்டென்
றேற்றினை மூலப் பகுதியை விட்டிங் கிசைந்தறியாய்
மாற்ற மறவிங் கறிந்திடப் போதம் வளம்பெறவே
தோற்றி யறிந்தது தானே யறிவு துலங்கியதே. 282

துலங்கி யிருந்த வடிவே வடிவென்று சொன்ன தொக்குங், கலங்கிய மூலப் பகுதியைப் பாரினிற் காண் கிலன்சூழ்ந், திலங்கு மிருளி லிரவி யுதிக்க விறந்தது போன், மலங்கு மயலது காணே னிதுவுன்றன் வல்ல பமே. 283

பன்னிய தத்துவர் தொண்ணூற் றறுவர் பகை செய்தெனக், கென்ன தியானென் றிசைந்து கெடுத்த விருளறவே, மன்னிய பார்வைதன் ஞலேயழித்த வள மெனக்கே, யின்னதிவ் வாறென் றியம்பவொண்ணு திவ் விறையியல்பே. 284

பஞ்சிமை தன்னி லெரிதாக்க வெந்த பரிசதுபோல்
வஞ்சகம் பண்ணிய மாயையுன் ஞேக்கின் மரித்திடவே
விஞ்சின போத மதுவே யழிந்திலை மிக்கவனே
யஞ்சுத லின்றி யதுவே துரிய மறிந்துகொளே. 285

### துரிய மகாத்மியம்.

பெரிய பிறவித் துயரி லழுந்திய பேதமெல்லா, முரிய வவத்தை யொருமூன்று நீங்கி யுணர்வுருவாந், துரிய மெனுந்தனைக் கண்டோர் பெருமைக்குச் சொல்லிலை யென்,றரிய மறைக ளரற்றிடுங் காணிவ் வகலிடத்தே.

துரியதூஷணம்.

மன்னு முடல்கா ணங்களை நானென்று மாயையுற்றுற்
றுன்னு முடல்கா ணங்களை நீங்கித் துரியமதா
முன்னு மவருடல் வாதனை போக வுணர்வுபரன்
றன்னொடொன் றாகவப் போது பிறப்பது தானறுமே.

அதீதவபேட்சை.

சேறியுமிவ் வாதனை நீங்க வடியரு டேசிகனே
யறியு மறிவுரு வானது போல வறிவுருவா
நெறியுங் கழன்றிட நில்லனு பூதியி னின்றறிந்த
குறியு முரையெங்கள் கோவே யுரைப்பன் குறைவற
[வே. 288

அதீததரிசனம்.

காரிய நீங்குங் கரிபரன் றன்னள வென்றுகண்டேன்
சீரிய போதம் விரிந்தது மீண்ட திறத்தசைவுங்
கூரிய சொப்பன மென்றுகண் டேனிக் குறியிறக்க
நேரிய சிற்பெரும் பாழா யிருந்தது நின்மலனே. 289

அதீதமகாத்மியம்.

சாக்கிரந் தன்னி லதீதம் புரிந்தவர் தம்பெருமை
யாக்க மழிவென் றிருந்த வலைவற வாமுடலிற்
றுக்கற வேயென்றுஞ் சாகாமற் செத்த தபோதனர்கள்
போக்கற நின்று புரிவ ரெனமறை போற்றிடுமே. 290

அதீத தூஷணம்.

ஏற்ற மிறந்த வதீதத்தை யின்றிங் கெழில்பெறவே
சாற்று மறையந்தந் தானறி யாத சமயிகடா
மாற்றும் பரவுட லென்றறி யாம லறிவிலிகள்
போற்றுந் துரிய மிறந்தவிப் பாழைப்பொருளென்பரே.

பாலட்சணம்.

பிறிதொன்று மின்றியிப் பின்னுபின் னம்மெனும் பேதமின்றிச், சிறிது பெரிதின்றிச் சேதனு சேதனஞ் செப்பலின்றி, யறிவயர் வின்றி யாதி நடுவின்றி யந்த மின்றிக், குறைவறநின்ற பரமென மாமறை கூப்பிடுமே.

அடிமுடி வின்றி யழிவாக்க மின்றி யருவுருவாம்
வடிவொன்று மின்றி மனம்வாக்குக் காயம் வருத்தலின்றி
விடியிரு ளின்றி விளங்கி யிருக்கின்ற மெய்ப்பரத்தைக்
கடிய பிறப்பொழிப் பார்க்கன்றி யப்பொருள் காண்பரி
[தே. 293

பராபேட்சை.

காட்டிய காரியோ பாதி கழியக் கரியளித்தாய்
கூட்டிய காரணே பாதி கழிந்த குறியதித
நாட்டி டெனையிங்ங னுண்டவ னேபர நாடியிடப்
பூட்டிய பாதம் பொதிந்தரு ளாயெங்கள் புண்ணியனே.

பரதரிசனம்.

கேட்டிங் கிருந்த வதீதத்தை யின்றிங்ஙன் கேடதன்றிச், சுட்டி யிருந்தவர் தம்மை யறியெனத் தோய்ந்தறிந்தேன், மட்டிங் கிடாத பெருங்கண் விழித்து மகிழ்ந்திருந்தங், கொட்டிய பூரண மாகிய தேயெங்க ளுத்தமனே. 295

ஆக்க மழிவின்றி நின்ற சிவந்தனை யங்கைதனி
னீக்கமி லாமணி போல நிகழ்த்தினை முன்னிகழ்ந்த
போக்கரி தான வவத்தை யொழிந்ததுன் போதகத்
வாக்கெனும் வேதக வல்லப முற்ற வளமெனக்கே.[தின்

விசுவக்கிராசம்.

சேறியும் பரந்தரி.சித்தனை முன்னைச் செகமதென்னுங்
குறியதிங் கெங்ஙன மென்றது செப்பிடு கொற்றவனே
பிறிவற வேசக மெங்கு நிரம்பிநற் பேரொளியாய்க்
குறைவற நின்றதை யானெங்ங னேயினிக் கூறுவனே.

ஒழிவற வேசக மெங்கு நிரம்பி யொளிரும்பர மிழிவுறு கின்ற செகத்தலைந் தாற்பர மென்செயுநீ கழிவற வேயிது செப்பா யெனக்கண்க ணீர்மல்கியே மொழியு நிலையறி யேனிது செப்பெங்கண் முன்ன வனே. 298

உறைந்த சகத்துமுன் னுண்டில்லை யென்றதிங் கோர்ந்திடவே, நிறைந்த பரமது நீயது வாகு நிலைப்றி யச், சிறந்த வனுபவத் தார்க்கன்றி யார்க்குந் தெரிவரி தென், றறைந்தது காணு மருமறை நீயிதை யாய்ந்து கொள்ளே. 299

நீயது வாறு யெனும்வாக் கியத்தி னிலைமை கொண்டே, சேயவ னேயிந்தச் சீவ பரத்திற் சிறப் பறிந்தே, ஞய வனுபவந் தன்னி லயிக்கியத் தானசுகந், தூயவ னேயறி வித்தரு ளாயென் றுயரறவே. 300

ஒன்றிய வின்ப முனக்கினிச் சொல்லுவ னுத்த மனே, நின்றநற் சீவ பரனெனும் போத நிலைய தொன்று,பின்றிங் கனுபவந் தன்னு லறிந்திங் கியம்பிடு நீ, மன்றல் கமழ்தொங்ஙன் மார்பா வுரைப்பன் வளம் பெறவே. 301

உபசாந்ததரிசனம்.

காரண மற்ற பரிபூ ரணமுற்ற கண்ணனவாந்
தாரணி யேழிரண் டுண்டிங் கிருந்த தலங்கனவாம்

பூரணக் ராச மகிழ்ந்துப சாந்தம் பொருந்துமிட
மாரண மோதுஞ் சொருபஞ் சுழுத்திய தாகுமன்றே.

ஐக்கியமகிழ்ச்சி.

மன்னுமிங் கப்பி லிரவி யிரண்டுற்ற வாறதுபோற்
றுன்னுமிம் மாயையிற் சீவ பரனெனத் தோன்று
பன்னு மறையப்பு வற்ற விரவி பகுப்பதற்ற [மெனப்
தென்னு முபாதி யறப்பா சீவ னிரண்டிலையே. 303

இரண்டிலை யாகி யிசைக்க வொருவரிங் கென்பர்
கரி, முரண்ட சமயத்தின் மூர்க்கர்க ளின்று முதலிரண்
டாய்த், திரண்டொன்ற தாக வரிதெனும் வேதமிச் சிற்
சொருபம், புரண்ட சுயம்பிர காசமறியிப் புரையறவே.

சொருபவபேட்சை.

தீர்த்தரு ளாயென்றன் றீவினை தன்னைச் செழுஞ்
சுடரே, யார்த்தறி வாய்நின்ற வானந்த வாரி யருளடி
யைச், சேர்த்தருளாய்நற் சுயம்பிர காசஞ் செறிந்
திடவே, காத்தரு ளாய்கரு ணாலய னேயென் களை
யறவே. 305

சொருபதரிசனம்.

காரிய காரண சீவ பரனெனுங் காட்சியற்றுச்
சிரிய பூரணக் ராசமுஞ் சாந்தமுஞ் சேர்ந்தொடுங்கு
நேரிய மோன மொழியாஞ் சொருப நிலைதுரியங்
கூரிய பார்வையிற் கூடியொன் றுனதென் கூறுவதே.

நீலோற்பலவாக்கியம்.

உறைகின்ற சத்திய ஞானனந் தானந்த முற்றறிய
மறைசொலு முண்மையறிவு பரத்தொடு வாய்த்தவின்

பஞ், செறிபுன னீலோற் பலமணந் தன்னுருச் சேர்ந்
தழகு,நிறைதரும் வாக்கிய முற்றே யறியு நிலையறியே.

அநுபூதிவியப்பு.

போக்கும் வரவு மிலாதநற் பூரண போதமது
வாக்கு மனதுக்கு மெட்டாத வின்ப வடிவறுதி
யாக்கும்ப்ர பஞ்சம தாகி யலாதவ கோசரத்தைத்
தேக்கும்படிசெலச் சேர விழுங்கிற்றென் செய்வதுவே.

சுவாநுபூதியருமையுரைத்தல்.

உற்றே யுடன்மன முள்ளு மிறந்திங் குணர்வறநா
னற்றே யகில பரனு யிருந்த வசைவுமறத்
துற்றேயப் பூரணக் ராச மிழந்த சுகசொருபம்
பெற்றே யிருந்தவர்க் கல்லாதிச் செய்தி பெறவரிதே.

அநுபவமகிழ்ச்சி.

சற்று மசைவறச் சந்தய நீங்கிச் சதுர்பெறவே
மற்றிங்கி லாத சுகசொரு பத்தை மருவியிட்டிங்
குற்றங் கிருந்த படியே யிருக்க வுரைத்தருளிப்
பற்றிங்கி லாத மௌனத்தி லேயுறப் பாலித்ததே. 310

ஊனுகி யுற்ற கரணமு மாகி யுகந்துநின்ற
நானுகி நானிங் கிறந்தவ னுகி நலம்புரிந்த
தானுகித் தானுல குண்டவ னுகிநற் சாந்தனுமாய்க்
கோனுகி மோனத் திருந்தவன் ருனெங் குருபரனே.

ஊனில்லை யுற்ற கரணமு மில்லை யுகந்துநின்ற
நானில்லை நானிங் கிறந்தது மில்லை நலம்புரிந்த
தானில்லை தானுல குண்டது மில்லைநற் சாந்த மில்லைக்
கோனிங் கிருந்த படியே யிருந்த குறிப்பினர்க்கே. 312

ஊனுண்டிங் குற்ற கரணமு முண்டிங் குகந்துநின்ற
நானுண்டு நானிங் கிறந்தது முண்டு நலம்புரிந்த
தானுண்டு தானுல குண்டது முண்டுநற் சாந்தமுண்டு
கோனிங் கிருந்த படியே யிராத குறிப்பினர்க்கே. 313

பிறவி விரும்பல்.

உற்றிடு மாமறை மூவருந் தேவரு முற்றறிய
வற்றியுஞ் சற்று மறியாத வான்பொருண் மாயையுடன்
பற்றிய பாசத்தி னின்றிடு வேனுக்குப் பாரில்வந்து
பெற்றிடும் பேறு பெறுமாகி வின்னம் பிறப்பினிதே.

நித்தனை நிட்களன் றன்னை நிராமய நின்மலனைச்
சுத்தனைப் புத்தனைத் தோன்றாத் துணையைச் சுகமயனை
யத்தனையன்றி நிரஞ்சனன் றன்னடி யார்பொருட்டான்
மத்தனைப் போலும் வடிவுகொண் டானையென் வாழ்த்
[துவனே. 315

விழுந்து புரண்டு பரவுங்கண் ணீர்மல்கு மெய்விதிர்க்கு
மழுந்து மிரங்கு மகமகிழ் வாகு மதிசயிக்குந்
தொழுந்தவமற்றனமென் றுரையாநிற்குந் தொல்லுலகி
லெழுந்து முனைத்தொழ லுண்டாகினன்றென் றியம்பி
[டுமே.316

அன்றே பொருளுட லாவியெல் லாமுன்ன தாக்கி
விட்டேட,னின்றே சொரூப நிலையினி றுத்திய நேர்மைத
னக், கின்றேகைம் மாறடி யேனருள் கைக்கிங் கிசைவ
தெனி, லுன்றன் னடிமைக் கடிமையல் லாதென் னுள
தெனக்கே. 317

கூறியா வடிவுடைக் கோமள வல்லி குடியிருந்த
மறையாக மத்தை வலங்கைமீ காமன் வயங்கிடவே
யறிவாற் றமிழி லருளறிவானந்த சித்திதன்னை
நெறியாகக் கற்றுணர் வார்க்குப் பரகதி நிச்சயமே. 318

காணுந்து சோலை வலங்கைமீ காமன் கதிபெறவே,
வாணுந்து தேவர்க்கெட் டாவறி வானந்த வண்மைகுன்
றுத், தேனுந்து செஞ்சொற் றமிழா லுரைத்த சிறந்த
வறி, வானந்த சித்தி தனைத்தேர் பவர்பிறப் பற்றவரே.

ஆகச் செய்யுள் 326

முற்றிற்று.

குருவே துணை.

## புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| சிவகீதைத் திரட்டு-குறிப்புரையுடன்(புதிய பதிப்பு) | 1 | 0 | 0 |
| திருவாசகம்-பாக்கெட்சைஸ் ... ... ... ... | 0 | 10 | 0 |
| தாயுமான சுவாமிகள் பாடல்-பாடபேதத்துடன் | 0 | 8 | 0 |
| நவநீதசாரம் (வினவிடை) ... ... ... ... | 0 | 8 | 0 |
| வேதாந்தசாரம் ,, ,, ராப்பர் | 0 | 10 | 0 |
| திருக்குறள், பரிமேலழகருரை, தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரை. 2 வாலியம் | 6 | 0 | 0 |
| வாக்கியசுதையென்னுந் திருக்குத் திருசியவிவேகம் மூலமும் உரையும், சம்ஸ்கிருதமொழிபெயர்ப்பு | 0 | 2 | 0 |
| சித்தாந்தபிந்து ... ,, ,, ராப்பர் | 0 | 8 | 0 |
| வேதாந்தபரிபாஷை ,, ,, ,, ,, ,, | 0 | 10 | 0 |
| அத்துவிதவுண்மை-பாக்கெட்சைஸ் ... ... | 0 | 1 | 0 |
| நாநாஜீவவாதக்கட்டளை-குறிப்புரையுடன் ... | 0 | 4 | 0 |
| தருக்கபரிபாஷை-குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) | 1 | 0 | 0 |
| பாட்டியற்கொத்து-உரையுடன். (இதில் வச்சணந்திமாலை, சிதம்பரப்பாட்டியலின் பொருத்தவியல் மரபியல்,நவநீதப் பாட்டிய லடங்கி யிருக்கின்றன) | 0 | 6 | 0 |
| மோட்ச சாதன விளக்கம் ... ... ... ... ... | 2 | 0 | 0 |
| சர்வதரிசன சங்கிரகம். (இதில் உலோகாயதமதமுதல் வேதாந்தமதமீறாகப் பதினாறு மதங்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன). சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு | 2 | 0 | 0 |
| வேதாந்தப் பிரதீபம் ... ... ... ... ... | 0 | 12 | 0 |
| சமயவாதநிவார[illegible]ம் ... ... ... ... | 0 | 1 | 0 |
| விவேகசூடாமணி-[illegible]சைஸ் ... ... ... | 0 | 8 | 0 |
| சிவமகிம்நஸ்தோத்[illegible]-சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு | 0 | 1 | 0 |
| தோடகமென்னும் வேதசாரசமுத்தாரணம் ,, ,, | 0 | 4 | 0 |
| தோத்திரக்கொத்து ... ... ... | 0 | 1 | 0 |
| வைசியகுல விளக்கம் ... ... ... | 0 | 4 | 0 |

(தபாற்சார்ஜ் பிரத்தியேகம்).

கோ. வடிவேலுசெட்டியார், தமிழ்ப்பண்டிதர்,

கோமளீசுவரன்பேட்டை, சென்னை.